காமன் கதைப்பாடல்

பதிப்பு

அ. சதீஷ்

நெறியாளர்

வீ. அரசு

தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005

ஜூலை - 2005

காமன் கதைப்பாடல்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பு

அ. சதீஷ்

நெறியாளர்

வீ. அரசு

பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
ஜூலை - 2005

நெறியாளர் சான்றிதழ்

பேராசிரியர் வீ. அரசு,
துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'காமன் கதைப்பாடல்' *எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச்* **'சுவடியியலும் பதிப்பியலும்'** *எனும் பட்டயப் பேற்றிற்காக* **அ. சதீஷ்** *அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பித்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனிமுயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.*

நெறியாளர்,

(பேராசிரியர் வீ. அரசு)

நாள் : 2005
இடம் : சென்னை-5

பதிப்பாளர் உறுதிமொழி

அ. சதீஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'காமன் கதைப் பாடல்'** எனும் பதிப்பேடு என்சொந்த முயற்சியால் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

(அ. சதீஷ்)

நாள் : 2005
இடம் : சென்னை-5

உள்ளடக்கம்

காமன் கதைப்பாடல்	பக்கம்
பதிப்புரை	I-X
காமன் கதைப்பாடல்	1-74

பதிப்புரை

இங்கு பதிப்புக்கு எடுத்துக்கொண்ட காமன் கதைப் பாடல் திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் தென்மாதிமங்கலம் என்னும் கிராமத்தில் சுவடி வடிவில் ஆய்வாளருக்கு கிடைக்கப் பெற்றது. 'காமன் கதை' என்னும் தலைப்புக் கொண்ட அச்சுவடியுள்ள பாடல்கள் அக்கிராமத்திலுள்ளவர்களால் சடங்குடன் நிகழ்த்தப்படும் ஒரு கூத்து வடிவமாகும். இக்கூத்து நிகழ்த்தப்படும் முறை குறித்தும் அதில் பின்பற்றப்படும் சடங்கு குறித்தும் காண்பதற்கு முன்பு வழக்காற்று வடிவங்களில் காமன் கதை எத்தகைய செல்வாக்கு செலுத்தியிருக்கிறது என்பதை காண்போம்

வழக்காற்று வடிவங்களில் காமன் கதை

ருக்வேதம் தொடங்கி காமன் என்ற கருத்துரு வாக்கம் பல்வேறு புராணங்களில் இலக்கியங்களில் வெவ்வேறான பொருளில் வெவ்வேறான வடிவங் களில் ஆழமான பாதிப்பினைச் செலுத்தியிருக்கிறது. இக்கதை நாட்டார் வழக்காற்று வடிவங்களான கதை, கதைப்பாடல், ஒப்பாரி, லாவணி, வில்லுப்பாடல், கூத்து முதவியவற்றிலும் கலை வடிவங்களான ஓவியம், சிற்பம் முதலியவற்றிலும் ஆழமான பாதிப்பினைச் செலுத்தியிருக்கின்றது. ஒரு சமூகத்தின் பல்வேறு வழக்காற்று வடிவங்களில் இத்தனை செல்வாக்கு செலுத்திய கதை வெகுசிலவே, குறிப்பாக பாரதம், இராமாயணக் கதைத் தொன்மங்களைப் போன்று காமன் கதைத் தொன்மமும் இந்தியக் கதைமரபில் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளது.

வேதம், புராணம், செவ்விலக்கியம், வாய்மொழி இலக்கியம், நிகழ்த்துக்கலை, வரைகலை என்று பல்வேறு வடிவங்களில் வழக்காறுகளில் இத்தொன்மம் காணப்பட்டாலும் இவை அனைத்திலும் கூறப்பட்ட கதையும், கூறப்பட்ட முறையும் ஒன்றல்ல. வேதத்தில் வருகின்ற காமனும் நாட்டார் பாடல்களில் வருகின்ற ஒரே குணாம்சம் கொண்டவனில்லை. நாட்டார் பாடல்களிலேயே போளூர் வட்டத்தில் இருக்கும் கதைக்கும் மதுராந்தகம் வட்டத்தில் இருக்கும் கதைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. இதுபற்றி குறிப்பிடும் வாய்மொழிப் பாடலொன்று,

மால்மகன் மதனென்குதொரு புராணம்
மலர்வேதன் மகனென்குதொரு புராணம்
மால்வண்ணன் மகனென்குதொரு புராணம்
தர்மன் மகனென்குதொரு புராணம்
சால்கண்ணன் மகனென்குதொரு புராணம்
சங்கல்பன் மகனென்குதொரு புராணம்

காமன் பிறப்புக் குறித்த பல்வேறுபட்ட பல கருத்துகள் நிலவுவதை குறிப்பிடும் இப்பாடலைப் போன்றே காமன் கதையும் பலவேறுபாடுகளைக் கொண்டதாக அமைகின்றன எனினும் இவை யனைத்தையும் ஒன்றுபடுத்தும் மையப்புள்ளியாக காமம் என்ற உணர்ச்சியும் அவ்வுணர்வை ஏற்படுத்தக் கூடியவன் காமன் என்ற நம்பிக்கையும்தான் எனக் கொள்ளலாம்.

காமன் கதை பல்வேறு வழக்காற்று வடிவங்களில் அம்மண்ணின் மரபுசார்ந்து எவ்வாறு செயல்படு கின்றது என்பதைக் காண்பது அவசியம். அத்தகைய ஆய்வு விரிந்த நிலையில் செய்யப்பட வேண்டும் ஆகையால் இங்கு காமன் கூத்து எவ்வாறு நிகழ்தப் படுகின்றது. அதன் சமூக

செயல்பாடு எத்தகையது என்பதை மட்டும் இக்கட்டுரை ஆராய்கிறது.

காமன்கூத்து - நிகழ் இடமும் காலமும்

காமன் கூத்து வடதமிழகத்தில் திருவண்ணா மலை மாவட்டத்திலுள்ள தென்மாதிமங்கலம், போளூர், வந்தவாசி பகுதிகளிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் திருவள்ளூர் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் நிகழ்த்தப்படுகின்ற தெருக்கூத்து ஆகும். தென்மாதி மங்கலம் போளூர் பகுதிகளில் நிகழ்த்தப் படுகின்ற கூத்தை மையப்படுத் தியும் திருவள்ளூர் மாவட் டத்திலுள்ள ராஜ கண்டிகை, வங்கனூர் கிராமத்தில் நடைபெற்ற கூத்துப் பதிவினை ஒப்புநோக்கியும் இக்கட்டுரை எழுதப் படுகிறது.

காமன் கூத்து பங்குனி மாதத்தில் நிகழ்த்தப்படு கின்றது. தென்மாதிமங்கலத்தில் கிடைத்த கூத்துச் சுவடியில்

"சங்கராத்திக்குப் பிறகு சார்ந்த மாசி பங்குனியில்
சடங்குகள் தப்பாமல் சந்திரனைத் தான்
பார்த்து"

நிகழ்த்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. போளூர் திருவள்ளூர் பகுதிகளில் நடைபெறும் கூத்தில் இந்த அடி மாறாமல் உள்ளது. எனவே காமன் கூத்து பங்குனி மாதம் சடங்குகள் செய்து நிகழ்த்தப்படும் கூத்தாகும். இரவு பத்து மணிக்கு மேல் தொடங்கி விடிய விடிய இக்கூத்து நடத்தப்படுகின்றது. போளூரில் மட்டும் இரண்டுநாள் இரவு இக்கூத்து நடத்தப்படுகின்றது. நிகழ்த்தப்படுகின்ற இடத்தின் மண்வாசனையுடனும் அவ்வப் பகுதி சார்ந்த மக்களின் வாழ்வியலோடும் சடங்குகளோடும் நேரடியான தொடர்புடையதாக விளங்குகின்றது.

காமன் கூத்து - கதை

பல்வேறு புராணங்களில் காமன் பற்றிய கதைகள் இடம் பெற்றிருந்தாலும் கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ள கதையே விரிவாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளன. அக்கதையைப் பின்பற்றியதாகவே இக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது.

வைகுந்தத்தில் இருக்கும் திருமாலுக்கும் லட்சுமிக்கும் மகனாக பிறக்கிறான் மன்மதன். உலகிலேயே மிகவும் அழகான உருவுடனும் காண்பாரை காமத்தின் பால் ஈர்க்கும் செயல்திறன் மிக்கவனாகவும் விளங்குகிறான். இவனுக்காக ஆரோக்கியாபுரம் என்றொரு பட்டணத்தை நிறுவி அங்கு சுகமாக வாழ்ந்திருக்குப் படி அனுப்பி வைக்கின்றனர். மன்மதரும் அந்த பட்டணத்தை ஆண்டுகொண்டு சுகமாக இருந்தார். இதேபோல் கைலாச மலையில் உள்ள சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் மகளாகப் பிறக்கின்றாள் ரதிதேவி. கோடி சூரியனைப் போன்ற பிரகாசமாகவும் ஈடுஇணையற்ற அழகுடனும் விளங்குகின்ற ரதிதேவியை கண்ட நாரதர், ஆரோக்கியா பட்டணம் போய் மன்மதனிடம் உன் அழகுக்கு ஏற்ற பெண்ணொருத்தி இருக்கின்றாள் அவளை உனக்கு மணமுடிப்பேன் என்று கூறி வைகுந்தம் போய் திருமாலிடம் உன் மகன் (மன்மதன்) கல்யாணம் செய்ய வில்லை என்ற கவலையுடன் இருக்கின்றான். எனவே அவனுக்கு கல்யாணம் செய்ய வேண்டும் என்று கூறியதுடன் உன் மகனுக்கு ஏற்ற பெண் ரதிதேவிதான் என்று கூற, திருமால் கைலாசம் சென்று சிவபெருமானிடம் பெண்கேட்க, சிவபெருமான் ஒப்புதல் தர திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டு, திருமால் ஆரோக்கியாபுரம் வந்து மகன் மன்மதனிடம் இக்கருத்தை தெரிவித்த, திருமணம் பங்குனி மாதம் 18ஆம் தேதி அன்று

காலை நடைபெறுகிறது. அனைவரும் வந்திருந்து வாழ்த்தியதோடு சென்று விடுகின்றனர்.

மன்மதனும் இரதியும் சுகமாக வாழ்ந்திருந்தனர். இவர்கள் இப்படி இருக்க சிலகாலம் கழித்து இந்திரர்சபையில் தேவர்கள் எல்லாம் கூடி உலகமே இருளடைந்து விட்டது இனி எங்களால் வாழ முடியாது என்று கூற அந்த நேரத்தில் அங்கு வந்த நாரதர் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒருதலையை சிவபெருமான் அருத்துவிட்டார். அதனால் பிர்மத்திதோஷம் பிடித்துவிட்டது. அந்த தோஷத்தை நீக்க சிவன் கண்ணைமூடி தியானம் செய்கின்றார். அதனால் தான் உலகம் இருளடைந்துவிட்டது என்று கூறி அந்த தவத்தை கலைத்தால் தான் பிழைக்க முடியும் அது மன்மதனால் தான் முடியும் என்றும் கூறுகின்றனர். இதைக்கேட்ட தேவேந்திரன் மன்மதனை வரவழைத்து இந்த செய்தியைக் கூற மீற முடியாமல் ஒப்புக் கொள்கிறான். ரதிதேவி மறத்தும் பெண் வேடம் கொண்டு மலர் அம்புகளால் சிவனது தியானத்தை கலைக்க, சிவன் நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை சாம்பலாய் எறித்துவிட்டார். இதைக் கேட்ட ரதிதேவி புலம்பி அழுது திருமாலிடம் சொல்லி அழ, திருமால் சிவனிடம் சென்று மன்மதனை மீண்டும் எழுப்பித் தருமாறு வேண்டு கிறார். மன்மதனை மீண்டும் எழுப்பிய சிவபெருமான் ரதிதேவியினிடம் உன் கண்ணுக்கு மட்டுமே இவன் தெரிவான் பிறர் கண்ணுக்குப் புலப்பட மாட்டான் என்று கூறி வாழ்த்தி விடைகொடுத்தார்.

நிகழ்த்தும் முறையும் சடங்கும்

இந்தக் கதை எப்படி கூத்தாக நிகழ்த்தப்படு கிறது என்பதைக் காண்போம். ஏனெனில் புராண நிலையில்

உள்ள வறட்டு தன்மைகளை உடைத்து கதையை வாழ்வின் நம்பிக்கைசார் சடங்கின் வழியாக வெளிப்படுத்தும் நாட்டாரியல் தன்மை நிகழ்த்தும் முறையில் தான் வெளிப்படுகின்றது. கூத்தில் நடிப்பவர்கள், பார்வையாளர்கள் அனைவரும் பங்குகொள்ளும் ஒரு கூட்டு முயற்சியாக இவ்வரங்கம் விளங்குகின்றது.

இக் கூத்து நிகழ்த்தப்படும்போது செய்யப்படும் சில சடங்கு முறைகளையும் பின்பற்றப்படும் விதிமுறைகளையும் பார்ப்போம். தென்மாதிமங்கலத் தில் இக்கூத்து சரியாக பங்குனி மாதம் 18ஆம் தேதி இரவு நடத்தப்படுகின்றது. அதாவது ரதி, மன்மதன் திருமணம் நடைபெறும் நேரத்தைக் கவனத்தில் கொண்டு தொடங்கப்படுகின்றது. பத்து நாட்களுக்கு முன்பாகவே தென்மாதிமங்கலத்தை சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று காமன் கதைப்பாடலை பாடி அரிசி, நெல் முதலியவை வசூல் செய்யப்படு கின்றன. இது கூத்து செலவுகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது.

காமன், இரதியின் அமர்ந்த நிலையில் உள்ள மண்சிற்பங்கள் செய்து கொண்டு வரப்படுகின்றது. காமன் இரதி திருமணத்திற்கு இச்சிலைகளையேப் பயனப்டுத்துகின்றனர். பச்சை மூங்கில் ஒன்று வெட்டி வந்து வைக்கப்படுகின்றன. இது முகூர்த்தக்கால் நாட்டப் பயன்படுத்தப்படுகின்றது. திருமணத்திற்கு தேவையான பொருட்கள் எல்லாம் பயன்படுத்தப்படுகிறது. (தாலி உட்பட) இவ்வனைத்து முன்னேற்பாடுகளுடனும் கூத்துக் கலைஞர்களுக்கான ஒப்பனைகளுடனும் கூத்து தொடங்கப்படுகின்றது.

ஊர்மத்தியில் உள்ள பிள்ளையார் கோயிலின் முன் உள்ள பொதுவிடத்தில் முகூர்த்தக்கால் நாட்டி காமன் கூத்து தொடங்குகின்றது. காமன் ரதி திருமணம் முடிந்தபின் காமன் ரதி சிலைகளை தலைமேல் தூக்கிக்

கொண்டு இருவர்செல்ல பின்னால் கூத்து நடிகர்களும் ஊரைச் சுற்றி வருகின்றனர். வரும்பொழுது ஊரில் உள்ள பழைய முறம், கூடை, பிய்ந்துபோன பாய் முதலியன சேகரிக் கப்படுகின்றன. பின்னர் மீண்டும் முகூர்த்தக்கால் நாட்டிய இடத்திற்கே வந்து காமதகனம் செய்யப் படுகின்றது. இந்த காமதகனத்தில் பார்வையாளர்கள் அனைவரும் பங்கு கொண்டு சேகரிக்கப்பட்ட முறம், கூடை, பாய் முதலியவற்றை எரிக்கின்றனர். இங்கு காமனை எரிப்பது மட்டும் நோக்கமன்று பழைய பொருட்களை எரித்துவிட்டு புதிய பொருட்களுடன் புழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுத்துவதாகவும் தன் துன்பம் தொலைந்தது போன்ற மன எழுச்சியை உண்டு பண்ணவும் ஒரு வளமை நோக்கிய சடங்காக இது செய்யப்படுகின்றது. பிறகு ரதியின் புலம்பல், காமனை மீண்டும் எழுப்புதல் என்று காமன் கூத்து முடிவடைகின்றது.

கூத்தின் முற்பகுதி கலகலப்பாகவும் மகிழ்ச்சி யாகவும் செல்கின்றது. பிற்பகுதியில் ஆரம்பமாகும் துக்கம் பார்வையாளர்கள் மத்தியில் பெருத்த மனக் கலக்கத்தை ஏற்படுத்துகின்றன. தென்மாதிமங்கலத்தில் நடைபெறும் இந்தக் கூத்தைப் பொருத்தவரை தொழில் முறைக் கலைஞர்களால் இதுநிகழ்த்தப்படு வதில்லை. இவ்வூரிலேயே கதையும், கூத்தும் நன்கு அறிந்த ஆசிரியர்களால் நடிப்பார்வம் உள்ளவர் களுக்குக் கற்று தரப்பட்டு நடிக்கப்படுகிறது.

திருவள்ளூர் பகுதிகளில் இவை கூத்து முறையாக நிகழ்த்தப்படுகின்றது. அதாவது கதை நிகழ்த்திக் காட்டப்படுகிறது. போளூரில் இக்கூத்து இரண்டு நாட்கள் நடத்தப்படுகின்றன. முதல்நாள் திருமணம் வரையும் இரண்டாம் நாள் திருமணத் திற்குப் பிறகு நடைபெறும் நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப் படுகின்றன. இங்கேயும் சடங்குகள்

அதிகம் செய்யப்படுகிறது.

இக்கூத்து சில முடிவுகளுக்கு நம்மை அழைத்துச் செல்கின்றன.

புராணக் கூறு அதிகம் உள்ள இக்கதை எப்படி நாட்டார் மரபில் வந்தது? அதாவது தேவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள யாரையும் பலியிடத் தயாராவார்கள் இதில் பாதிக்கப்படுபவர்களைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. மன்மதன் நிச்சயம் அழிவான் என்று தெரிந்தே அவனை அனுப்பும் இந்நிகழ்ச்சியில், சாவது உருதி என்று தெரிந்தும் மனஉறுதியுடன் செல்லும் மன்மதனின் செயல்பாடு நமது வீரநிலை வழிபாடுகளான நடுகல் வழிபாட்டிற்கு நம்மை இட்டுச்செல்கின்றன. இந்ததிறம்தான் நாட்டாரியத் தன்மையில் இக்கதைய இணைக்கிறது. அடுத்து ரதியின் அழுகை என்பது பெண்களின் மீதூர்ந்த துக்கத்தில் ஏற்படும் ஒப்பாரியாகும். அடுத்ததாக காமனை எரிக்கும் நிகழ்ச்சி காமனை எரித்தல் என்பது ஒரு குறியூடுதான். உற்பத்தி - பகிர்வு - மறு உற்பத்தி என்ற வாய்ப் பாட்டில் மறு உற்பத்தி என்பதில் உள்ள அதீத நம்பிக்கைதான் இப்புராணக்கதை நாட்டாரியல் தன்மையில் மேலோங்கி நிகழ்த்தப்படுகின்றது.

தென்மாதி மங்கலத்தில் நடைபெறும் இக்கூத்து ஏனைய கூத்து மரபுகளில் இருந்து முக்கியமான வேறுபடும் புள்ளியாக சிலவற்றைக் குறிப்பிடலாம் அவை.

- ஒரே இடத்தில் இக்கூத்து நிகழ்த்தப்படுவதில்லை பாதிகதை ஊரை சுற்றி வரும்பொழுது நிகழ்த்தப் படுகின்றது.
- தொழில் முறையான கலைஞர்களால் நிகழ்த்தப்படுவதில்லை.

- இதில் முழுக்க முழுக்க பறையிசைமட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. வேறு எந்த இசைக் கருவியும் பயன்படுத்தப்படுவதில்லை.
- ஏனைய கூத்துகளைவிட அதிகமான சடங்குகளால் பின்னப்பட்டுள்ளது இக்கூத்து.
- பார்வையாளர்களின் பங்களிப்பு இக்கூத்தில் அதிகம்.

ஒரே கூத்துப் பிரதி தென்மாதிமங்கலத்தில் சடங்கு சார்ந்தும் திருவள்ளூரில் சடங் சாராமல் தொழில் முறைக் கலைஞர்களால் வழக்கமான கூத்தாகவும் நிகழ்த்தப் படுகின்றது. திருவள்ளூர் கூத்தில் கதாபாத்திரங்களின் கட்டற்ற புனைவுத் தன்மையை உடைக்கும் கட்டியங் காரன் இடம் பெறுகின்றான். மேலும் கூத்து மரபில் இத்தகைய போக்குகளை கொண்ட காமன் கூத்து கதை மரபிலும் சில விவாதங்களை மேற்கிளப்புகின்றன.

புராணிகத் தன்மையிலான சைவ, வைணவ போராட்டம் என்பது இந்தியச் சமூகத்தில் குறிப்பாக தமிழ்ச் சமூகத்தில் 16, 17, 18ஆம நூற்றாண்டுகளில் மிக அதிக அளவு நடைபெற்றுள்ளது. இப்போராட் டம் அடுத்த சமயங்களைத் தாக்ககூடிய அளவு வக்கிரத் தன்மை அடைந்துள்ளது. இதற்கு அந்தக் காலகட்டத்து இலக்கியங்களை எடுத்துக் கொண்டால் ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. இதன் தொடர்ச்சியாக உருவ வழிபாடு என்பதில் தொடங்கிய இராமலிங்க வள்ளலார் சமரச சன்மார்க்க சங்கம் தொடங்குகின்றார். சமயத்தில் நடைபெற்ற புரட்சிகரமான செயல்பாடாக இது விளங்க, நாட்டாரிய கதைமரபு திருமாலையும் சிவனையும் சம்பந்தி ஆக்கிப்பார்த்து சமய ஒருமைக்கு வழி வகுத்தது. கதையின் இடைப்பகுதியில் இவ்விவாதம் காமன் ரதிக்கான விவாதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் சிவனும் திருமாலும் பேசிக் கொள்ளும்

போது ஒருவரிடம் ஒருவர் மதிப்புடையவராகவே காணப் படுகின்றது. ஆக சமயகாழ்ப்பு அதிகமான காலகட்டத்தில் அதனை நீக்கும் முயற்சிகளாகத் தொடங்கிய பல முயற்சிகளில் இதுவும் ஒன்றாக கணிக்க முடிகின்றது.

ஆக காமன்கதை, காமன் கூத்து என்பது தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுத் தளத்தில் நேரடியான தொடர்புடன் விளங்குகின்றது. அரங்க நிகழ்வாக வரும்பொழுது தொழில் முறைக் கலைஞர்களாலும் சடங்காக நிகழ்த்தப்படும் பொழுது அந்த குறிப்பிட்ட சமூகத்தாராலும் நிகழ்த்தப்படும் இப்போக்கு ஒரே கூத்தின் பல்வகைப் பரிமாணங்களை நமக்குத் தருகின்றன.

மேலே கூறப்பட்ட காமன் கூத்து இங்கு பதிப்பிக் கப்பட்டுள்ள பாடலின் கதையை ஒட்டி அமைந் திருந்தாலும் இப்பாடலே முழுமையான கூத்துப்பிரதியல்ல மாறாக இப்பாடல் பல்வேறு மாற்றங்களுடன் கூத்தாக நடிக்கப் படுகின்றது.

இக்கதைப் பாடல் பதிப்பு ஆவணப்படுத்தல் என்ற நோக்கத்திற்காக மட்டுமே இங்கு பதிப்பிக்கப் படுகிறது. தமிழகம் முழுவதும் காமன் கதை பல்வேறு வடிவங்களில் வழங்கப்படுவதால் அவற்றை வட்டாரம் சார்ந்த அளவில் தொகுத்து வரலாற்று நிலவியல் கோட்பாட்டு ஆய்வுக்கு உட்படுத்தினால் இக்கதைப் பாடலின் மூல வடிவத்தினைப் பெற முடியும்.

இக்கதைப்பாடலை பதிப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கி நெறிப்படுத்திய பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கும் இச்சுவடியைக் கொடுத்துதவிய தென்மாதிமங்கலம் காசி உடையார் மற்றும் ஆரிமுத்து உடையார் ஆகியவர்களும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காமன் கதைப்பாடல்

விநாயகர் துதி

சங்கரனார் ஈன்றெடுத்த ஐங்கரத்து முகத்தோனே
ஷண்முகப் பிள்ளையாரே உண்மையுள்ள வினாயகரே
சத்தி வினாயகரே உத்தமியாள் புத்திரனே
ஜெகமெங்கும் புகழ்படைத்த மகிமையுள்ள கணபதியே
சர்வாதி ஜனங்களுக்கும் குருவாய் உதித்தோனே
சகலகலை வல்லோனே பகல்போல் நிரைந்தோனே
சட்டமுடனே உமக்கு திட்டமாக வேணுதுகள்
மிக்கநல்ல எள்ளுருண்டை சமைத்தநல்ல இட்லிதோசை
சுவைக்கும் அதிரசமும்
ஷண்முக பிள்ளையார்க்கு உண்ணும்படி யமுதும்
ஷம்பங்கி ஷம்பா வெண்மைநிற பால்சம்பா
சணபோக சம்பா மினமான நல்லசம்பா
சர்குனி சம்பா அற்புத மானசம்பா
சைவமல்லிகை சம்பா துய்யநிற மானசம்பா
சங்கையில் ஒயர்ந்தசம்பா தங்கநிற மானசம்பா
சாத்து ஓலைசம்பா நேர்த்தியான பூஞ்சம்பா
சகலசம்பா வகையில் பெறுமையுள்ள கோடசம்பா
சர்க்கரை பொங்கலிட்டு நர்க்கையாலே தொட்டு
ஜாதிதேங்காய் உடைத்து மேதினியில் பழவகைகள்
சரிந்தமுந்திரி கனியும் நிரைந்தப் பலாக்கனியும்
சரவாழைக் குலையும் நிரமுள்ள மாங்கனியும்
சகலபழமும் பரப்பி பகல்விளக்கு மாவிட்டு
சக்திதரும் சிவந்தி வித்தைதரும் வீசுகோந்தி
ஜாதிபட்சை துளசி மேதினியில் மனம்வீசி
சந்தனம் கஸ்தூரி புனுகுகலந்த பரிமளத்தர்

சரமல்லி குடைமல்லி சரமுள்ள செவ்வலரி
சாத்தலரி கோத்தலரி நேர்த்தியான மலர்களெல்லாம்
சரியாக கொண்டுவந்து பிரியமுடன் பிள்ளையார்க்கு
சாம்பிராணி கற்பூரம் திம்தாம் மெனவெனவே
ஓம்கணபதி யாயநமா யோகதந்தி ராயநமா
ஏகசுத்தி ராயநமா ஏகக்கம்பி ராயநமா-வென்று
சாற்றியே கைகட்டி போற்றியே யான்பணிந்தேன்
சறுநாக மேளதாளம் திறமான கின்னாரம்-தம்பூர்
சவுரி கடுக்கன்மேல் முறுகொளியாம் வைரமுடி
சப்பானி பிள்ளையார்க்குத் தப்பாமல் தலைக்கட்டி
உறுவாமல் சலியாமல் கொண்டுவந்த மாணிக்கம்
கற்பக வினாயகர்க்கு இவ்வளவும் தான்பூட்டி
ஐந்து கரத்தோனே ஆனை முகத்தோனே

சுப்பிரமணியர் துதி

திருத்தணிகை வேல்முருகா தெய்வானைவள்ளி நாயகனே
ஆலமுண்ட ஈஸ்வரனுக்கு அருள்புரிந்த கந்தவேலே
சீலர்கலை ஆதரிப்பாய் திருச்செந்தூர் தேவகோனே
மாரன் கதைபாட மனது வைத்து காறுமையா

சரஸ்வதி துதி

தாயே சரஸ்வதியே சதுர்முகநார் தேவியரே
சரஸ்வதியே வாணியரே தாயே வரங்கொடுப்பாய் - என்
நாவுதன்னில் நீயிருந்து நல்லோசை யருள்புரிவாய்
ஏடு தவராமல் எழுத்தாணி சாயாமல்
தப்பிதங்கள் வாராமல் சரஸ்வதியே முன்னடவாய்

திரௌபதியம்மன் துதி

தோரா வடிவழகி திரௌபதியே பாஞ்சாலி
நெறுப்பில் பிறந்தவளே நீலவர்ணன் தங்கையாரே
மந்தார குந்தியர்க்கு முந்திவந்த மருமகனே

சந்தன வடிவழகன் தருமராஷன் தேவியரே
பாடத் தொடங்கினேன் பாஞ்சாலன் சீர்மகளே
அக்கினியில் நீபிறந்தாய் ஐவருக்கும் தேவியானாய்
பாராலும் வேந்தர்முன்னே அந்தபேரான பாரதத்தை
நேராக நீயிருந்து அந்தபாவி துரியன்சேலை
நிந்தித்து உயிர்வதைத்தாய் சுந்தரியே போற்றிசெய்தோம்

அங்காளம்மன் துதி

அந்தரி கவுரிநீலி ஆங்காரி மலையனுரா
அம்பிகா போற்றிநின்றோம் மைந்தர்கலை காருமம்மா
வஞ்சனை வைப்புசூன்யம் தந்தரி மாயஷாலம்
வைத்திடும் பாவிதன்னை சித்ரவதை செய்யும்தாயே

விஷ்ணுதுதி

மாதவர் மைந்தனான மன்மதனை உண்டுபண்ண
மாசிமூன்றாம் பிரையில் மகிஷ்சி கொடியோனே
ஆசையாம் போளூரில் அன்பான பாலரெல்லாம்
அமுததிரு விதிதன்னில் அங்குஷனை கொலுநிறுத்தி
மாரன் பிறந்ததுவும் மணமாலை சூடினதும்
அவனியில் கீர்த்திபெற்று புவனத்தை ஆண்டதுவும்
மாண்டு மடிந்ததுவும் மண்ணில் பிறந்தகதை
மைந்தர்கள் பாடுகின்றோம் மகாதேவா பாடுகின்றோம்
மகாதேவா துணையிருப்பாய்

துர்கை துதி

ஓம்என்று உச்சரித்து ஆமென்று நிச்சயித்து
ஓதுவேன் மதன்கதையை மாது ரனதுர்கி
ஓரிமாயன் சுந்தரியே வாரி காட்டேரி - கலி
ஓங்காளி சாமுண்டி ஷெகஷெண்டி நீலகண்டி
ஒட்டிதரப்பி காணபைரவி குட்டிசாத்தான் பைரவி
ஓசந்தமல்லக்கா எல்லக்கா இசைந்தபொம்மக்கா ஷாலக்கா

உதிரகாட்டேரி சூலி பிதுருதேவதை பிடாரி
உத்தண்டி குரலுபேசி பத்திரகாளியாக மாரி
உத்திரவாமுனி தேவதைசூலி இதோவாராகி துர்கி
ஒளிதரும் சமக்காதேவி பலிகொள்ளும் காத்தவராய
ஒண்டிமுனி சண்டிவிரா சண்டப்பிரசண்ட துன்ன
ஒய்யாத இனுசாகரப்பா ஓடிவா நீங்களெல்லாம்
இச்சிறியவன் பாடலுக்கு ஒத்தாசையா யிருந்து
ஒருசத்துக்கள் இல்லாமல் ஒருநிமிஷ நேரமட்டும்
குறைஒண்ணும் வாராமல் உதவிசெய்து கார்த்திரானால்
மிதமான உங்களுக்கு
ஒன்பது ஈரல்பிரட்டி-(அந்த) ஐம்பது ஆட்டுக்கரியை
ஒருவித குழம்பாக்கி அறுபது கோழிமுரித்து
திரண்டரொட்டி மாவிளக்கு உப்புகரி வாருபொறியல்
அப்பளம் செஞ்சா சுருட்டு ஓர்நிரைய பிப்பாவில்
தேர் நிரைந்த சாராயம் ஒதிரம் பிரட்டிஉங்கள்
எதிராகவும் படைப்பேன் உறுதியுடன் நாங்களெல்லாம்

மதன் உற்பத்தி

மாயன் மனமகிழ்ந்து மங்கையரை தானழைத்து
மானிலத்தில் உள்ளவர்க்கு மாய்கைகளை யுண்டுபண்ணி
மனதிலே தான்நினைத்து மாதுமகா லஷ்மியும்
மாயவரும் தான்கூடி மங்கையரும் தான்இருக்க
மாயனும் நினைத்தபடி மாதுகெர்பம் தானாகி
மாதம்பத்தும் சென்றவுடன் மன்மதனும் தான் பிறந்தார்
மைந்தன் பிறந்திடவே மாயவனும் லக்ஷ்மியும்
வாரி எடுத்தார்கள் வர்ணமுத்தம் இட்டார்கள்
உச்சி முகந்துமாயன் லெட்சுமியை தான்பார்த்து
அடிகண்ணே இளங்கொடியே கற்பகமே செந்தேனே
மகாதேவர் புண்ணியத்தால் மைந்தன் பிறந்தானடி
பாலனை பார்க்கவென்றால்

சீலனாய் இவன்நமக்கு ஜெனித்ததுவும் சிவன்செயலே
கொலமாம் இவன் வடிவம் கொம்பனையே காணனடி
மதிவதனன் தன்னழகும் மார்பின் ஒளியழகும்
தோளின் ஒளியழகும் தொப்பிளின் திருவழகும்
கூந்தல் அழகும்கூட கொத்தவனார் தன்னழகும்
மார்பின் ஒளியழகும் தோளின் ஒளியழகும்
நெத்தியழகும் கூட அவன் நேர்மை கழுத்தழகும்
மூன்றாம் பிறையதுபோல் முகத்தில் புறுவங்களும்
முல்லை அரும்பதுபோல் பல்லின் வரிசைகளும்
முகந்தன் அருளாலே முழியழகு தான்படைத்தான்
இந்திரன் தேவர்முதல் இமையவரும் ஈடுமுல்லை
கந்தர்வ ராஷபூபன் காளைக்கு ஈடுமில்லை
அம்பத்தி ஆறுதேசம் அரசர்களும் தகுதியல்ல
சந்திரரும் சூரியரும் (அடி) சுந்தரியே கோடியில்லை

லஷ்மி சொல்

மாயவரே என்கணவா நான்மாளா மகிட்சிகொண்டேன்
மைந்தனை பார்க்கவென்றால் மாளாது தேவராலே
சுந்தரி மைந்தனுக்கு ஷோஷயம் பார்க்கவேணும்
விந்தையாய் சாஸ்திரங்கள் (அந்த) அந்தணரை தானழைத்து
அன்புடனே லட்சுமியள் தென்புடனே தானுரைக்க

மாயன் சொல்

அரக்கரை கருவருத்த ஆதிமூலாக் கரமூர்த்தி
பஞ்சாங்க அந்தணரை பார்த்து அழையுமென்றார்
வந்தார்கள் பிரம்மனாடன் வைகுண்டம் தான்கூடி
சத்தியலோகம் வாழும்பிர்மன் சரிதான புரோகிதருமே
சப்தரிஷி யோர்களெல்லாம் சதிராக தேவர்களும்
வைகுண்டம் தன்னில்வந்து மாயனை தண்டனிட்டார்
கையமற்றி ஆசிகூறி கார்மேகன் என்னசொல்வான்

வாருமையா தேவர்களே வன்மையுள்ள சத்யலோலா
சப்தரிஷி யோர்களெல்லாம் தானவரே அமர்ந்திடுங்கள்
பஞ்சாங்க அந்தணரே என்பாலனுக்கு சாஸ்திரங்கள்
அஞ்சாமல் பார்க்கவேணும் அவனுடைய யோகமதை
பாலன் பிறந்ததிங்கள் ஜாலந்தன்னிலே மாசி
பஞ்சமிதிதியும் யோகம் அஞ்சாத கேட்டையாகும்
பத்தினில் குருவுநின்று பார்க்கிரான் ராகுகேது
தப்பாது ஆறுஐந்தில் அப்பொழுது கெண்டமுண்டு
அக்கினியாலே கெண்டம் அந்தஅழகுள்ள பாலனுக்கு
அதுகுரைஒன்றும் வாராது அவனியில் கீர்த்தியுண்டு
அரன்மேல் பகையுமாகி அநேக வரங்கள்பெற்று
ஆளுவான் பூமி தன்னை - அவன் ஆண்சிங்கம் போலவேதான்
மாயன் முகுந்தனம்மா மனதில் சஞ்சலப்படாதே
பாலன் வடிவழகை பார்க்கமுடி போவதில்லை - இவன்
யாரும் எதிரில்லாமல் மூதண்ட வில்வளைப்பான்
அவனியில் கீர்த்தியுண்டு அண்ணலே போய்வருவாய்
அந்தணரை தான்பார்த்து நாரணனும் ஏதுசொல்வார்
பாலனுக்கு நாமதேயம் பார்துரையும் பிரம்மதேவா
சத்யலோகம் வாழும்பிர்ம்மன் சாத்துவார் நாமதேயம்
மாயவர்க்கு பிறந்ததினால் மன்மத ராஜனிவர்
காமராஜ னென்றும் (அந்த) கட்டழகருக்கு பேருமிட்டார்
சித்திரஜேனன் என்றும் நத்திடுய பேருமிட்டார் - அந்த
செங்கரும்பை வில்வளைத்து ஜெயங்கொள்ளும் காமவீரன்
பாங்காய் இவர்குநாமம் பதிர்ந்திட்டேன் மாயவரே
கோடான கோடிபொன்னை கொப்பெனவே தான்கொடுத்தார்
வண்டியினில் சக்கரையை வழங்கினார் மாயவரும்
வந்திருந்த தேவனுக்கு அன்போடு விருந்தளித்தார்
வாழ்த்தி விடைகொடுத்து மாயவரும் தேவர்களை
அவரவர் இருப்பிடங்கள் அமரலோகம் போனபின்பு
பிள்ளையைத் தானெடுத்து அள்ளியே முத்தமிட்டார்

நல்லநாள் கொண்டுமாயன் நலமுடனே தொட்டிலிட்டார்
பிள்ளையை வாழ்த்தினார்கள் பெருமாலும் லக்ஷிமியும்
மாயவனும் லக்ஷிமியும் மனதில் சந்தோஷமாக
பிள்ளைக்கு ஏற்றதொரு நல்லதொரு ஆபரணம்
காலிற்கு முத்துதண்டை கனத்ததொரு சரப்பளியும்
இடைக்கு அண்ணாகயிரும் எடுத்து கட்டினார் மாயன்
கல்லிழைந்த வைரத்தோடு - (அந்த) கட்டழகனுக்குப் பூட்டி
கழுத்திற்கு ரத்தினமாலை கனத்ததொரு சரப்பளியும்
நெத்திக்கு திலர்தநாமம் நேர்விழிக்கு மைத்தீட்டி
முத்துமுடி தான்தரித்து மோகன வில்கொடுத்தார் - அவர்
பச்சைநிறமும் பவழக்கனிவாயும் உச்சி வடிவழகும்
மன்மதனார் சீர்வடிவம் - அவர்
அழகை எழுதவென்றால் ஆராலும் ஆகாது
உருவை எழுதவென்றால் ஓராலும் ஆகாது
இந்தப் படியாக இருக்கின்ற வேளையினில்
ஐந்து பிராயமது ஆச்சுதுகான் மன்மதற்கு
அப்பொழுது மாயவரும் அன்புள்ள பாலனுக்கு
அழகுள்ள மன்மதர்க்கு ஆடைகளை தான்கொடுத்து
அருமையுடன் கல்விகலை ஆயனும் ஓதிவைக்க
ஏழு பிராயமதில் இருக்கின்ற வேளையிலே
பள்ளிக்குத் தானனுப்பி படிக்கவிட்டார் மன்மதனை
நாலுவேதங்க ளாறுசாஸ்திரி மனுவ காணும்
ஆகபூராண வித்தை அத்தனையும் கற்றுவர
சாஸ்திரி விதிப்படிக்கு சகலகலை தான்படித்து
பள்ளிக்குத் தானனுப்பி பலகலையும் கற்றுவந்தார்
வில்வித்தை யானைஏற்றும் மல்உந்தம் வித்தையாவும்
மார்கொடுத்து சண்டைசெய்யும் வேல்எடுத்து எதிரிதன்னை
கத்தியோடு ஈட்டிபாலா அத்தனையும் கற்றுவந்தார்
சகலகலை யுணர்ந்து சாரங்கப் பாணிமைந்தன்
பள்ளியை விட்டுநின்று பந்துவிளை யாடிமாரன்

வைகுண்ட நாதன்பெற்ற வரனாம் சிங்காரமகன்
யாவையும் கற்றுணர்ந்து எம்பெருமான் பாதந்தன்னில்
மன்மதன் தான்பணிந்து மாயவரை கண்டு சொல்வார் - எனக்கு
முத்தினால் ரதமும்வேண்டும் மோகன மாலைவேண்டும்
மரகத தேருவேண்டும் மாணிக்க குடைகள்வேண்டும்
பஞ்சவர்ண கிளிகள் - (நான்) பாங்காய் ரதத்தில்பூட்டி
கொஞ்சி விளையாடி நான் குவலயத்தே பார்க்கவேணும்
தென்றலின் தேரேரிநான் தேசத்தைப் பார்க்கவேண்டும் - நான்
அம்புவில் கைபிடித்து அண்டத்தை தாக்கவேணும்
திக்குவிஜயம் செய்து - (நான்) தேவரைக் கார்கவேணும்
ஆயனே என்தகப்பா எனக்கழகான தேசம்ஒன்று
அமர்ந்திட வேணுமையா (நான்) ஆரோக்கியமாக இருக்க
மாதொன்று தேடவேண்டும் (எனக்கு) பங்கமா இருக்குதையா
பாரில் உள்ளதை கண்டாகி பரந்தாமன் தானறிந்தார்
பார்திபன் தன்மனதை அரிந்தாரே மாயவரும்
அங்குஜன் தன்மனதை அடிதெரிந்தாயோ லக்ஷிமியே
செல்வ னுரைத்தவிதம் அவன்மனது கோணாமல்
அமர்த்தவேண்டும் தேசமொன்று ஆலமுண்ட ஆதிமாயன்
அமர்த்தினார் தேசமொன்று ஆலமுண்ட ஆதிமாயன்
மண்டபங்கள் ராஜமாளிகை மாடவீதிகளும் சோலைகளும்
பத்துலக்ஷசம் தெருவை பரந்தாமன் அருளிச் செய்தார்
சாலைகளும் சோலைகளும் சத்திரமும் சாவடியும்
கோவிலும் குளமும் தேவர்கொண்டாட மாளிகையும்
தென்றலின் தேர்படைத்தார் தேவர்களை காத்தமாயன்
செங்கரும்பு வில்படைத்தார் ஐங்கனைகள் தான்கொடுத்தார்
சேனை படைகளுடன் சேர்த்துவைத்தார் மாயவரும்
இத்தனை வைபோகங்களும் அத்தனையும் தான்படைத்தார்
சித்ரமுடி மன்மதர்க்கு இத்தனையும் தான்கொடுத்து
ஆரோக்யா பட்டணத்தை அன்பால் முடிதரித்தார்
ஆளுமென்று மனமதர்க்கு ஆயனும் அமைத்துவைத்தார்

செங்கோல் கரம்பிடித்தார் ஸ்ரீராமர் தன்மகனும்
முத்துநவ ரத்தினத்தால் வைத்தசிம்மா தனமிருக்க
எத்திசையும் பேர்விளங்க எடுத்துசெங் கோலைஏந்தி
ராஜ்யம் தனைநடத்தி ராமச்சந்திரன் தன்மகனும்
இருந்துவரும் நாளையிலே
பெண்ஜாதி இல்லையென்று பெருத்த விசனமுடன்
கல்யாணம் இல்லையென்று கனத்ததோர் கவலையாகி
புன்னாக தன்மனது பெருத்த விசனமுடன்
என்தகப்பன் மாயவர்க்கு என்மேல் இறக்கம்இல்லை
அன்னையாள் லக்ஷ்மிக்கு அர்த்தம்ஒன்றும் ஆகவில்லை
என்னை தனியாகவிட்டு இருக்கின்றார் தந்தைதாயும்
அனயாய காலமிது அரனேநான் என்னசெய்வேன்
இப்படியாக மாரன் இருந்துவரும் நாளையிலே
அறிந்தாரே நாரதரும் அங்குஜன் தன்மனதை
கைலாச கிரிதனிலே கன்னிஉமை நாயகனும்
கண்டாரே பார்வதியை கர்த்தாவும் அப்பொழுது
காரிகையே பார்வதியே கன்னிகையே ஏதுசொல்வேன்
காரணமாய் உனதுஅண்ணன் கனமுடனே ஏதுசெய்தார்
கனத்த உலகமதில் கர்பகோடி ஜீவனுக்கும்
காமங்கலை உண்டாக்க கடாக்ஷித்தார் மன்மதனை
மன்மதர்க்கு ஏற்றதொரு மங்கைதனை யுண்டாக்க

ரதி பிறப்புதல்

மனதிலே தான்நினைத்தேன் மாதுஉமை பார்வதியே
உன்னுடைய கிருபையினால் உண்டுபண்ணும் என்றுரைத்தார்
பார்வதியாள் சொல்கேட்டு பரமசிவன் ஏதுரைப்பான்
அங்கயர் கன்னியரை அளித்தோமென்றார் புத்திரியை
பரமசிவன் தானளித்த பாவையந்த புத்திரிக்கு
ரதிதேவி என்றுசொல்லி நலமாக நாமமிட்டார்
பார்வதியாள் பெற்றுடுத்த பத்தினியாள் பெண்ரதியும்

அழகில் மிகுந்தவள்காண் அன்னைரதி தேவியரும்
ஐந்து பிராயமது ஆச்சுக்காண் பெண்ரதிக்கு
அம்மானை பாடுவதும் அருமலரைச் சூடுவதும்
மங்கைப் பருவமது மாதுக்கு வந்ததுகாண்
கண்டாரே தந்தைதாயும் கணமா மகிழ்வடைந்தார்
இப்படி யாகவேதான் இருக்கிற வேளையிலே
வைகுந்தம் தேடியேதான் வாராரே நாரதரும்
வீணை கரத்துடனே வேகமுடன் நாரதரும்
நாரணனார் தன்னிடத்தில் வந்தாரே நாரதரும்
நாரதரும் வந்துநின்று நாரணனை தான்பணிந்தார்
மாயவனாம் தான்பார்த்து மாமுனியை மனமகிழ்ந்து
வாரும்வாரும் நாரதரே வந்த வயனமென்ன
அதைக்கேட்டு நாரதனும் அன்புடனே ஏதுசொல்வான்
அண்டங்களை காத்தமாயா அறிந்துவந்தேன் சிறுசேதி
ஆரோக்யா புரத்தில் அழகான மன்மதரும்
வாய்விட் டழுதாரே வன்மைதன்னை என்னசொல்வேன் - அவன்
கல்யாணம் இல்லையென்று கனத்த விசாரமிட்டார்
பத்தினி இல்லையென்று பெருத்த கவலையானார்
கண்களில் நீர்ததும்ப கருகினார் திரேகமெல்லாம்
மங்கையை ஒன்றுதேடி மணமாலை சூட்டவேண்டும்
மன்மதர்க்கு இன்னும்தான் மணம் செய்யாதெண்ணவிதம்
அந்திவண்ணன் நாரதர்சொல் அறிந்தாரே மாயவரும்
கலகத்தை யுண்டுபண்ண அகிலத்தில் ஒருவருண்டோ - நீர்
காணாத வார்த்தைசொன்னால் தோனாது என்மனது - என்
மைந்தனை பார்க்கவேண்டும்
மாமுனியே நாரதரே மங்கையுண்டோ லோகமதில்
அங்குஜர்க்கு ஏற்றத்தோடு பாவையுண்டோ பூவனத்தில்
கண்டாயோ நாரதரே காரிழையை பூஉலகில்
பார்த்திருந்தால் சொல்லுவாயே பாரளந்த சஞ்சாரி
நாரதரும் தான்கேட்டு நலமுடனே ஏதுரைப்பார்

கண்டேன் என்பாட்டா காரிழையை லோகமதில்
அண்டர்களும் காணாத அருணா ஜலத்திற்கும்
ஆதிகை லாயமதில் அந்திரியால் தானளித்த
சுந்திர மூர்த்திமாது அந்தரி பார்வதிக்கு
சந்திர ஜோதிபோல சுந்திரப்பெண் பிறந்தது
ஆச்சுதையா ஆண்டுபத்து அழகுரதி தேவியென்று
அன்பான பேருமிட்டு சித்திர பதுமைபோல
செல்வியும் தானிருக்க கார்கின்றார் கன்னிமாடம்
மன்மதற்கு ஆகுமென்று மாயவரே ஓடிவந்தேன்
ஆனை கெஜேந்திரற்கு அருள்புரிந்த ஆதிமூலம்
நாரதன் தன்மொழியை நாரணனும் தான்கேட்டு
மனதில் சந்தோசமாக மங்கையரை தானழைத்து
தாமரையில் வீற்றிருக்கும் நேமமுள்ள லக்ஷிமியே

யோசனை தான் கேழ்க்குதல்

மன்மதர்கு கல்யாணம் மணம்செய்ய வேணுமென்று
மாயவரும் லக்ஷிமியும் மகிழ்ந்துமேதான் பேசினார்கள்
இன்பமுள்ள போஜனங்கள் இசைவாக உண்டபின்பு
ஆதிகை லாசமதில் அரனிடத்தில் போவோமென்று
காடு செடிகள்தாண்டி கடுகவழி நடந்தார்கள்
வந்து புகுந்தார்கள் வரமளிக்கும் கைலாசம்
போயி புகுந்தார்கள் பேரான கைலாசம்
ஈஸ்வரரைக் கண்டுமப்போ சுவாமி மனம்மகிழ்ந்தார்
அப்போது ஈஸ்வரியும் அன்பாகத் தானுமப்போ
வாரும்அண்ணா என்றுசொல்லி வருந்தியே தானழைத்தார்
அப்பொழுது ஈஸ்பரரும் அன்பால் மனமகிழ்ந்து
மைத்துனரைத் தானழைத்து வாருமென்று சொன்னபின்பு
வந்ததொரு சேதிதன்னை எனக்குவகையாய் சொல்லுமென்றார்

பெண் கேழ்க்க வருதல்

ஆனாலும் நீர்கேளும் ஆதிபர மேஸ்பரரே
என்மகனுக்கு உன்மகளை இன்பமுடன் கேழ்க்கவந்தேன்
என்றுசொல்லி மாயவரும் இன்பமுடன் அவரும்கேட்டார்
அப்போது ஈஸ்பரரும் அன்பாக தாரேனென்றார்
அப்போது மாயவரும் அதிகசந் தோஷமானார்
தேவர்களும் வானவரும் சேரவே தானழைத்து
ஊரிலுள்ள உரம்பரயை உண்மையுடன் தானழைத்து
ஜாதியுள்ள சம்மந்தம் தானுமிக பேசலுற்றார்
பரியங்கள் என்னவென்று பாங்குடனே கேழ்கையிலே
மைத்துனரைப் பார்த்துமப்போ மாயவனும் சொல்லுகின்றார்
பரியம் ஒருகோடி பாவையர்க்கு வேணுமென்றார்
கண்ணிறைந்த ஆபரணம் கன்னிகைக்கு வேணுமென்றார்
சரிகை புடவைகளும் சல்லா ரவிக்கைகளும்
தங்க வளையல்களும் தனம்மிகுந்த ஒட்டியானம்
இத்தனையும் தான்கொடுத்தால் எங்கள் பெண்ணை தாரோமென்றார்
மைத்துனரைப் பார்த்துமப்போ மாயவரும் சொல்லகின்றார்
ஜாதியில் உள்ளபடி தாரேன்காண் உன்பரியம்
இருபத்தோ ராயிரம்பொன் இப்பவே தாரேனென்றார்
எட்டுலக்ஷசம் பொன்னுடைமை பாங்காக தாரேன்என்றார்
ஆறுலக்ஷசம் பொன்னுடமை அன்பாக தாரேன்என்றார்
ஒன்பதுலசம் பொன்னுடமை ஒப்பந்தம் தாரேனென்றார்
பத்துலக்ஷசம் பொன்னுடமை நான்பாங்காக தாரேனென்றார்
முலைபாலு கூலியேதான் மூணுலக்ஷசம் தாரேனென்றார்
அப்படியே நல்லதென்று மாயவரும் ஒப்பிக்கொண்டார்
அப்பொழுது ஈஸ்பரரும் அருள் புரிந்து அன்னேரம்
எப்போது முகூர்தமென்று ஈஸ்பரனார் தானும் கேழ்க்க
அப்போது மாயவரும் அன்புடனே ஏதுசெய்தார்
வேதியரைத் தானழைத்து விதமுடனே அப்பொழுது
பொருத்தங்கள் பாருமென்று பொறுமையுடன் சொல்லையிலே

அப்போது வேதியனும் அன்புடனே பார்க்கலுற்றார்
வயிற்று பொருத்தங்கள் கொஞ்சம் வலுவா இருக்குதையா
கழுத்துப் பொருத்தங்கள் கனமா இருக்குதையா
கயிறு பொருத்தங்கள் (கொஞ்சம்) கணவனுக்கு ஆகாது
அதற்கு என்னபேதமில்லை ஆண்டவனே பாருமென்றார்
இப்படியாய் வேதியர்கள் இன்பமுடன் சொன்னார்கள்
எப்போது முகூர்தமென்று ஈஸ்பரனார் தானும்கேழ்க்க
அப்போது மாயவரும் அன்புடனே சொல்லுகின்றார்
பங்குனி மாதத்திலே பதினெட்டாந் தேதியிலே
வெள்ளிக் கிழமையிலே விடியஐந்து நாழிகையில்
நலமான வேளையிலே நக்ஷசத்திரம் பார்த்து
மன்மதனார் தனக்கு மனம்செய்ய வேணுமென்று
ஜெயபேரிகை தானடித்து சீமைஎங்கும் பாக்குவைத்து
ஐந்துக்கால் நாட்டும்மென்றார் ஆயன் மகன்தனக்கு
வாழைமரங்கள் வெட்டி வாசலிலே பந்தலிட்டார்
தென்னை மரங்கள் வெட்டி தெருவெல்லாம் பந்தலிட்டார்
பாக்கு மரம்பிளந்து பந்தல் அலங்கரித்தார்
வயிரத்தால் தூண்நிருத்தி வஜ்ஜிரத்தால் பந்தலிட்டார்
பூவாலே பந்தல்களை போட்டார்கள் அப்பொழுது
சுத்தி அலங்கரித்தார் சூரியனைப் போலவேத்தான்
எங்கும் அலங்கரித்தார் சந்திரனைப் போலவேதான்
வன்னி மரம்பிளந்து வாசலிலே பந்தலிட்டார்
முத்து மரம்பிளந்து முக்காதம் பந்தலிட்டார்
கமுகு மரம்பிளந்து - ஒரு காதவழி பந்தலிட்டார்
கொட்டார பந்தலிட்டு கொத்தவனார் மன்மதற்கு
பந்தலு இட்டபின்பு பாங்குடனே ஏதுசெய்தார்
தோரணங்கள் கட்டியேதான் தூங்கா விளக்கு வைத்தார்
பந்தல் அலங்காரம் பார்க்கமுடி போகாது
தூணுக்கு தூணுக்கு தூங்காவிளக்கு வைத்தார்
குத்து விளக்குகளும் குடவிளக்கு தானும்வைத்தார்

மல்லிகை முல்லைகளும் மலரால் அலங்கரித்தார்
பட்டுகள் கட்டியேதான் பரிவாய் அலங்கரித்தார்
ஆனிப் பொன்னாலேதான் அலங்கரித்தார் அப்போது
இந்தப் படியாக இருக்கின்ற வேளையிலே
மன்மதரைத் தானழைத்து மனையிலே குந்தவைத்து
சந்தன நலங்குகளும் சதிரான் சடங்குகளும்
அத்தர் புளுகுனாலே மெத்த முழுகவைத்து
அபரஞ்சி பட்டதினால் விபரீதமாய் துடைத்து
ஐந்துதிரு நாமமிட்டு பச்சைதொங்கல் முருகு
ஆனிப்பொன்னால் கடுகன் காணிகையாய் பூட்டி
பத்து விரலுக்கும் பசும்பொன்னால் மோதிரமாம்
கையில்தங்க காப்புமிட்டு கனத்தமிஞ்சி தானணிந்தார்
அந்த ஆபரணங்களை அழகாகப் பூட்டிக்கொண்டு
ஆசையுடன் இருபுரத்தில் புஜகீர்த்தியும் தரித்து
அகண்டதிருமார்பு தன்னில் துவண்டமுத்து மாலைகளும்
தஷ்சா கடகமுடன் அஷ்சா கணையாழி
அம்புய பாதமதில் கெம்பீர தண்டைகளும்
அங்குஜர்கு தான்பூட்டி மங்களம் ஜெயமென்று
அங்குஜர்கு பூட்டியபின் அருமையுள்ள ரதிதனக்கு
ஆதிசக்தி பார்வதியும் ஜோதிலஷ்மி தேவியரும்
ஆற்றில் ஜலமெடுத்து நெற்றியுடனே விடித்து
அபரஞ்சி பட்டதினால் விபரீதமாய் துடைத்து
நெத்திக்குச் சுட்டிகட்டி நேர்விழிக்கு மைதீட்டி
கல்லிழைத்த மோதிரங்கள் கணையாழிதான் போட்டார்கள்
முத்து முகத்துநல்ல முப்புரியும்தான் போட்டார்கள்
கண்ட சரபதக்கம் கழுத்தினில்தான் போட்டார்கள்
ஒட்டியானம் தான்போட்டு ஒசந்தபட்டு சேலைகட்டி
பாடகம் தண்டைகளும் பாங்காக தான்போட்டார்
காலாயி பீலாயி கணத்தமிஞ்சி தான்போட்டார்
பூட்டி அலங்கரித்தார், பொற்கொடியாள் ரதிக்கு

அனேகவித மாய்ரதியை அலங்கரித்தாள் அப்போது
இப்படி யாகவேதான் இளங்கொடிக்கு அலங்கரித்தார்
ஆனை அமர்த்தி ஆனையின்மேல் பேரிகையும்
அதிர்ந்து முழங்கிடவே குதிரையின்மேல் பேரிகையும்
கொம்பு முழங்கிடவே தப்பட்டை மேளங்களும்
தவில்முரசு நாகசுரம் எக்காளை யூதிவர
எங்கும் முழங்கிடவே ஜய பேரிகைதானும்
சின்னம் தோணிகளும் சிலவாத்தயம் தான்மூழங்க
பக்கம் விளக்கெரிய பகல்வத்தி தான்ஏத்தி
இந்த வகையுடனே இடிபோல் மூன்றுசதுர்
தேவதி தேவர்களும் திருமூர்த்திகளும் வந்தார்கள்
முப்பத்து முக்கோடி முனிவர்களும் வந்தார்கள்
நாற்பத்தி எண்ணாயிரம் நவரிஷிகளும் வந்தார்கள்
இந்திரனும் வானவரும் இமையவரும் வந்தார்கள்
எல்லோரும் வந்துமப்போ இருந்தார்கள் பந்தலிலே
மன்மதரைக் கொண்டுவந்து மணவரையில் தான்நிறுத்தி
மாலைகளும் போட்டு மன்மதரை அன்னேரம்
உட்கார வைத்தார்கள் உரன் முறையோர் எல்லோரும்
தேவர்களும் சொல்லியேதான் விளங்கினார் பிரம்மாவும்
முகூர்த்த கால்நாட்டியேதான் முறையுடனே சாஸ்திரங்கள்
குதிரையின் மேலேயேதான் ஏற்றினார் மாப்பிள்ளையை
பிள்ளையார் கோயிலாண்டை பிரியமுடன் தான்போனார்
சாஸ்டாங்க மாகவேதான் சாய்ந்துமவர் தண்டனிட்டார்
தேங்காயும் உடைத்துமவர் தெருவெங்கும் சுற்றிவந்தார்
பட்டுபாய் போட்டுமவர் பாங்குடனே அப்பொழுது
அனேகவித மாய்மதனை அலங்கரித்து கொண்டுவந்து
தங்க மனைமீது தனஞ்செயளால் ரதியை
அங்குஜர் வேல்துளங்கும் இடதுபுரமாக
அமரவர் உட்காரவைத்து சமர்த்தமன்னர் தேவர்களும்
முப்பத்து முக்கோடி முதலான தேவர்களும்

நாற்பத்தி எண்ணாயிரம் நவமுனிகளும் தானிருக்க
மாயவனும் ஆதிசிவனும் மகிழ்சியுடன் ஏதுரைப்பார்
அந்தணரைத் தானழைத்து அலுவல் நடத்துமென்றார்
அம்மி வலமாக அரசாணி முன்பாக
சாலும் கரகமும் தண்ணீரும் முன்பாக
வேத பிராமணர்கள் வேதங்கள் ஓதிவர
ஓமம் வளர்த்தி அப்போ உடையோனை தான்பணித்து
நேமமுடனே மந்திரங்கள் நிரைவேற்றி அப்போழுது
சாஸ்திரங்கள் சொல்லியேதான் சகலமும் தானறிய
ஆனிப் பொன்னாலேதான் அழகு திருமாங்கல்யம்
முன்னூறு பிராமணர்கள் முகூர்தமிட்ட மாங்கல்யம்
நானூறு பிராமணர்கள் நாளிட்ட மாங்கல்ளம்
ஐந்நூறு பிராமணர்கள் அஸ்தம் கொட்ட மாங்கல்யம்
எண்ணூறு பிராமணர்கள் எடுத்துத் தந்தமாங்கல்யம்
ஆயிரம் பிராமணர்கள் அங்கிருந்தார் அடைவாக
மகாதேவர் யாவருமே மகிழ்ந்துதொட்ட மாங்கல்யம்
இந்தப் படியாக இருக்கின்ற வேளையிலே
அம்மி வலமாக அரசாணி முன்பாக
சாலும் கரகமும் தண்ணீரும் முன்பாக
மாமனார் வந்துமப்போ மன்மதற்கு அன்னேரம்
தாரணை வார்த்துமப்போ சாற்றினார் ஈஸ்பரனும்
என்மகளை உந்தனுக்கு இன்பமுடன் தாரேன்காண்
என்றுசொல்லி ஈஸ்பரனும் இனிசொல்லும் வேளையிலே
அப்பொழுது பிரம்மாவும் அடைவாக ஏதுசெய்தார்
மாங்கல்யம் தானெடுத்து மன்மதர் கையில்கொடுத்து
அப்பொழுது மன்மதரும் அதிக சந்தோஷமாக
அக்கினி சாட்சிவைத்து திக்கென்று தன்குருவை
அரிஅரனையும் நினைத்து பரிசேனையும் நினைத்து
அரிஓம் சிவாயாவென்று அணிந்தாரே ரதிகழுத்தில்
சிவசிவ என்றுசொல்லி திருமாங்கல்யம் பூட்டிவிட்டார்

கோவிந்தா என்றுசொல்லி கோடிமுடிகள் போட்டார்
மாதுரதி தன்கழுத்தில் மாங்கல்யம் தான்அணிந்தார்
ரதிதேவி தன்கழுத்தில் நலமாக பூட்டிவிட்டார்
அருந்துதியைத் தான்பார்த்தார் மெல்லியை கைகொர்த்து
அம்மிவலமாக வந்து அரசாணி முன்பாக
அன்பாக சுற்றிவந்தார் அன்னைரதி மன்மதனும்
அப்பொழுது பிரம்மாவும் ஆகாஎன்னா சாஸ்திரங்கள்
செப்பும்படி சாஸ்திரம் சிராவரி யுள்ளதெல்லாம்
வையகம் புகழவேதான் மகிட்சியுடன் தானிருக்க
மாப்பிள்ளைக்கும் மங்கையர்க்கும் மாலைதனை மாற்றிவிட்டார்
சுண்டுவிரல் கைபிடித்து சுற்றிவந்தார் அரசாணி
அம்மி எடுத்தார்கள் அருந்துதியைப் பார்த்தார்கள்
சங்குநெலி போட்டு தான் எடுத்தார் அப்பொழுது
மஞ்சள் நீராடிஇப்போ மகிட்சியுடன் அப்பொழுது
ஆதிசிவனுக்கும் அடிவணங்கித் தெண்டனிட்டார்
மாயவர்க்குத் தண்டனிட்டார் மன்மதனும் மாதுரதி
வாழ்த்தினார் வாசவனும் வளர்கையிலே ஈசன்தானும்
அன்புடனே வாழ்த்துசெய்து தென்புடனே ஏதுசெய்தார்
அன்னத்தின் மீதுலேதான் ரதிகன்னியரை ஏற்றினார்கள்
அச்சுதனார் தன்மகளை பச்சைகிளி மீதில்வைத்துப்
அதிகவை போகமுடன் பதிதன்னில் கோலம்வர
அண்டம் கிடுகிடுன்னா இந்த மண்டலத்தில் உள்ளவர்மின்ன
ஆலமும் சுற்றிவிட கோலம் வந்தபிறகு
ஆனிப்பொன் பந்தலிலே மாணிக் கட்டாய்விரித்து
அதிலே இருவர்களும் ரதியுமே நாடியபின்
வந்ததொரு அந்தணர்க்கு வரிசை பரிசளித்தார்
வந்ததொரு தேவனுக்கு அளித்துமந்த தாம்புலத்தை
களித்துமந்த தாம்புலத்தை களித்துமவர் வாழ்து செய்ய
வரவாழி என்றுசொல்லி வரமளித்தார் தேவரெல்லாம்
வாகுடனே சென்றார்கள்

அப்பொழுது மாயவரும் அன்புடனே ஏதுசெய்தார்
வந்த உரம்பரைக்கு வாகுடனே அப்பொழுது
அடிசெய்யும் சமயல்என்றார் அரண்மனையில் எல்லோர்க்கும்
சர்க்கரையில் போஜனங்கள் சமையுங்கள் என்றுசொன்னார்
இவ்வார்த்தையை சொல்லுகையில் எழுந்திருந்தார் அப்பொழுது
வெங்கலப் பானையிலே பால்சம்பா அரிசி
பதிங்களம் தான்களைந்து கொதிப்பார்த்து இறக்கிடவே
கொப்பனவே தான்வந்தார்கள்

வாழைகாய் கொய்வார்கள் வழுதளங்காய் காம்பரிவார்
இளம் பிளாக்காயை இளம்முள்ளு போக்கிடுவர்
அம்பொன் அவரக்காய் ஆய்வார்கள் அப்பொழுது
செம்பொன் அவரக்காய் ஆய்வார்கள் அப்பொழுது
பாவக்காய் தானரிவார் பறங்கிக்காய் தானரிவார்
இளஞ்சுரக் காயும்அந்த இளந்தமர காயரிவார்
தேங்காய் திடுகிடுவார் மாங்காய் அரிந்திடுவர்
பாம்பு புடலங்காய் - அந்தபாங்கான பீர்கங்காய்
பேரான கொத்தவரை
வள்ளி கிழங்குகளும் வாழைதண்டு கீரையுடன்
சிறுகிழங்கு சீவெள்ளி (அந்த) சிறப்பான சேப்பங்கிழங்கு
கருணை காரகருணை (அந்த) சீரான ஆள்வள்ளியும்
அரைகீரை சிறுகீரை அகத்தி முருங்கைக்கீரை
முன்னை முசட்டை மூக்குரட்டை காரைபிரண்டையுடன்
கடர்க்கீரை இளங்கீரை (அந்த) பேரான கொத்தமல்லி
அவரை துவரையுமே அவசந்தி பருப்புடனே
பத்துவகை பச்சடியும் பாங்கான கீரையுடன்
ஆயிரத்தெட்டு குழம்புகளும் அடையுடனே தான்சமைத்து
பித்துநகு நெய்குளிகை போதாவே தான்பார்த்து
வடக பொடிபோட்டு மணிஜீரகம் தான்போட்டு
ஜீரகமும் வெந்தியமும் போட்டார்கள் அப்போழுது

கருவேப்பிள்ளையும் கூடகரி திட்டமாக போட்டு
சையுஞ் சொயும்என்று தனித்தனியே தான்மணக்க
மணங்கள் கமகமவென்று மாதர் புரைக்கேர
தாளித் திரக்கினார்கள் தாதிகள் கைகலாலே
நெம்பொன் பிரியனைமேல் சேரவோ அடுக்கினார்கள்
அப்பொழுது மாயரும் அன்புடனே ஏதுசெய்தார்
வந்த ஜனங்களெல்லாம் வரிசையாய் உட்காரவைத்து
வாழை இலைபோட்டு பரிவாக அப்பொழுது
இட்டாரே போஜனங்கள் இங்கேவந்த ஜனங்களுக்கு
சாதம் கரிவகைகள் தான்படைத்தார் அன்னேரம்
பச்சென்று கீரையுமே பொன்போல் சீர்பருப்பும்
காராவின் நெய்வார்த்து
வந்த ஜனங்களெல்லாம் வகையுடனே அப்பொழுது
சாப்பிட்டு இளைப்பாறி சந்தோஷ மானார்கள்
அப்பொழுது மாயவரும் அன்புடனே தாம்பூலம்
வந்த ஜெனங்களுக்கு வகையுடனே தான்கொடுத்தார்
அன்புடனே தாம்பூலம் அனைவரும் வாங்கினார்கள்
வாழிவாழி என்றுசொல்லி வரமளித்தார் தேவரெல்லாம்
அவரவர் இருப்பிடங்கள் அனைவரும் சென்றார்கள்
மன்மதனார் அரசுசெய்ய மானகரை உண்டுபண்ணார்
ஆரோக்கியா புரமொன்று ஆயனும் உண்டுபண்ணார்
சுற்றிமணி கோபுரமும் சொகுசான மேடைகளும்
ரத்தன மணிமண்டபமும் சித்திர பதுமைகளும்
இஞ்சி கிணறுகளும் எலுமிச்சம் தோட்டங்களும்
ஆறுகளும் ஏரிகளும் அழகான கால்வாய்களும்
பூசைசெய்யும் மாளிகையும் போஜன சாலைகளும்
படக்க அரண்மனையும் பாங்கான ஊஞ்சல்களும்
சகலமும் உண்டாகி சக்ராயுதன் அருளாலே
அப்பொழுது மாயவரும் அங்குஜனை தானழைத்து
மாயவரும் ஏதுசொல்வார் உனக்காக வேண்டுமென்று

ஆரோக்கியா பட்டணத்தை அரசாண்டு நீவருவாய்
ஆயினும் தான்சொல்ல அப்பொழுது மன்மதரும்
அப்படியே நல்லதென்று உபசரனை செய்தார்கள்
அன்னைரதி தேவியுடன் அரசாண்டு தானுமப்போ
அழகுதிரு மன்மதரும் இப்படியாக வேதான்
இருக்கின்ற நாளையிலே

தக்கன் கதை

தக்கன் அவனுமப்போ தாஷ்டீக மகாதேவன்
யாகம்செய்ய வேணுமென்று அப்படவே தான்நினைத்து
முப்பது முக்கோடி மகாதேவர்களே வாருமென்றார்
நாற்பத்தி எண்ணாயிரம் பிரமாவிஷ்ணு வாருமென்றார்
தேவேந்திரன் மகளும் திரமாக வாருமென்றார்
சப்தரிஷி யோர்களெல்லாம் தயவாக வாருமென்றார்
பிர்ம்மாவே இப்பொழுது வேதம்சொல்ல வாருமென்றார்
ஆதிமகா விஷ்ணுவேதான் ஐயனே வாருமென்றார்
அஷ்ட ரிஷிகளும் அன்புடனே வாருமென்றார்
சந்திரரும் சூரியரும் தப்பாமல் வாருமென்றார்
தக்கனிடம் சொல்படிக்கு சகலரும் வந்தார்கள்
அப்பொழுது தக்கனவன் அதிக மனமகிழ்ந்து
யாகங்கள் செய்யவென்று அலங்கரித்தார் அப்பொழுது
இப்படியாகவே தான் இருக்குமந்த வேலையிலே
அப்பொழுது ஈஸ்பரியும் அடைவாக மனமகிழ்ந்து
தக்கனிட வேள்விதன்னை தான்பார்க்க வேணுமென்று
சர்புளி தோலிடைஎயா சதாசிவனை அப்பொழுது
ஆதிபர மேஸ்பரியும் அடையுடனே தான்சொல்லி
சரணம் சரணம்என்று தலைசாய்த்தான் திருமுடியை
மனமகிழ்ந்து ஈஸ்பரரும் மங்கையரை கேட்கலுற்றார்
வந்ததொரு காரியத்தை வகையாக சொல்லுமென்றார்
அப்பொழுது ஈஸ்வரியும் அடைவுடனே சொல்லுகின்றார்

என்தகப்பனிட வேள்விதன்னை நான்பார்க்க வேணுமென்று
அப்பொழுது ஈஸ்பரியும் அன்புடனே கேழ்க்கையிலே
போக வரந்தாரும் புண்ணியரே என்று சொன்னாள்
அப்பொழுது ஈஸ்பரனும் மங்கையரைத் தான்பார்த்து
நம்மை இகழ்ந்துதக்கன் நல்லவேள்வி செய்குறார்
ஆதி கைலாசத்தை அனலாக்க வேணுமென்று
வஞ்சனைகள் செய்துமவன் வரந்தீர்க்க வேணுமென்று
அவதி நினைந்துமவன் இருக்குமந்த வேளையிலே
அவன்வேள்வியைப் பார்க்கவேதான் ஆசையோ உந்தனுக்கு - நீ
போகவேண்டாம் பெண்ணே புத்தியுள்ள ஈஸ்பரியே
அந்தமொழி கேட்டுமப்போ ஆதிபர மேஸ்பரியும்
தேவர்கள் எல்லோரும் திடமாக வந்திருப்பார்
பிரம்மாவும் விஷ்ணுவும் வேந்தர்எல்லாம் வந்திருப்பார்
சரஸ்வதியும் லஷ்மியும் தயவுடனே வந்திருப்பார்
ஆனந்த மாகவேதான் (அவன்)வேள்விதனை செய்கையிலே
அந்தநல்ல வேள்விதன்னை அடையாளம் பார்க்கவேணும்
இந்தவரம் தாரும் ஈஸ்பரரே என்றுசொன்னாள்
அடியாள் கிருபைவைத்து ஆண்டவரே தாருமென்றார்
நல்லது போவென்றார் நலமுள்ள ஈஸ்பரரும்
அப்பொழுது பார்வதியும் அடைவுடனே தான்மகிழ்ந்து
பிர்மனிட பாதந்தன்னை பணிந்துள்ள ஈஸ்பரியும்
போய்வாரேன் என்றுசொல்லி புறப்பட்டாள் ஈஸ்பரியும்
தங்க கொலுசுகளும் சதங்கை கலகலன்ன
பாடகம் தண்டைகளும் பரியாக ஓசையிட
ஆபரண மாலைகளும் அழகாய் அலங்கரித்து
முத்துப் பள்ளக்கிலேதான் மொய்குழலாள் தானேரி
தாதிகளும் புடைசூழ தய்யலாள் வாராலே
ஆனந்தமாகவே தான் அம்மணியும் வாராளே
யோகமாதா வாராளே யாகசாலை தன்னருகில்
அம்மணியும் வாராளே பல்லக்கு விட்டிரங்கி

பைங்கிளியும் வந்துநின்றாள் தகப்பனைக் கண்டுமப்போ
தயவாக தண்டநிட்டார் திருமுகத்தைப் பாராமல்
பெருமையுடன் பேசாமல் தக்கனும் தானிருந்தார்
அப்பொழுது ஈஸ்பரிக்கு ஆங்காரம் தானாகி
தாயார் இருக்குமந்த தன்னிடமே வந்தாளாம்
மாதாவை கண்டுமப்போ வணங்கினாள் மகாதேவி
ஈஸ்பரியை பார்த்துமப்போ அவருமே பேசாமல்
மவுனமாக தானிருந்தார்
அப்பொழுது ஈஸ்பரிக்கு ஆங்காரம் தானாகி
யாகங்கள் எல்லாம்தான் அழியவே வேணுமென்று
பேயிருக்கும் சுடலைபோல் போகவேணும் என்றுசொல்லி
சாபம் கொடுத்தாலே சங்கரியாள் ஈஸ்பரியும்
எண்ணாது எண்ணியேதான் ஏங்கி முகம்வாடி
அப்பொழுது ஈஸ்பரரும் ஆகாது என்னாலே
புண்ணியனார் அப்பொழுது போகாதே என்றுசொன்னார்
பெண்புத்தி யாலேயல்லோ புறப்பட்டு வந்தேனே
மகாதேவர் ஈஸ்பரர்க்கு வஞ்சனைகள் செய்தேனே
ஈஸ்பரனார் தன்னிடத்தில் இனிபோகாதே என்றுசொல்லி
ஆலோசனை செய்து அம்மணியாள் ஈஸ்பரியும்
அப்பொழுது அவ்வரசன் மைந்தரில்லை என்றுசொல்லி
பிள்ளைகள் இல்லையென்று பெருந்தபசு செய்தாராம்
குழந்தையில்லை என்றுசொல்லி கோடிதீபம் செய்தாராம்
அவர்தபசுக் கிரங்கியப்போ சங்கரியாள் அப்பொழுது
பூமிவெடிப்புக்குள் போய் புகுந்தார் யீஸ்பரரும்
மலைவரியின் தேவியுடன் வயிற்றிலே தான் இருந்து
அப்போது மலைவரியின் ஆனந்தம் உண்டாகி
பிள்ளை உண்டாச்சு என்று பூரித்தாள் மலைபோலே
கண்டு மனமகிழ்ந்து காரியணி யப்போ
வளர்பிரை போலவேத்தான் வளர்ந்தாளே யீஸ்பரியும்
இப்படியாக வேதான் இருக்குமந்த வேளையிலே

ஆதிகைலாசத்தில் அரனாரும் தானிருக்க
யீஸ்பரனார் தானுமவர் இன்னும்வர வெகுநேரம்
பரமனார் அப்பொழுது
ஞானத்தால் பார்த்தார்கள் நடந்த விதங்களெல்லாம்
அப்பொழுது யீஸ்பரற்கு அதிக கோபம் தானாகி
தக்கனிட வேள்விதன்னை தானழிக்க வேணுமென்று
விக்கினீஸ்பரனை யப்போ மகாவீரமாய் வாருமென்று
தக்கனிட யாகம்தன்னை தான்கலைத்து வாருமென்று
அந்தமொழி கேட்டுமப்போ ஆனதோரு வினாயகரும்
பூத கணங்களுடன் புறப்பட்டார் அப்பொழுது
பெருச்சாளி வாகனத்தில் பெரும்மூர்க்கமாய் தானேறி
பூமி நடுநடுங்க பிறப்பட்டார் வினாயகனும் - அப்பொழுது
தக்கன் பார்த்து அவன்ஏது செய்யலுற்றான்
கற்கண்டு சர்க்கரையும் கெணத்த பெலாச்சுளையும்
அப்பளம் தோசைகளாம் அதிரசமும் பால்வடையாம்
செப்பரிய எள்ளுரண்டை சிறந்த அவல்கடலை
மாங்கனியும் தேங்காயும் (அந்த) வாழைப் பலாச்சுளையும்
மலைபோலே சாப்பிட்டார் வகையுடனே அப்போது
தக்கனவன் தான்பார்த்து தானுமவன் ஏதுரைப்பார்
அய்யா வினாயகரே அய்யனே உந்தனுக்கு
இந்தப் படிவகைகள் இன்பமாய் கொண்டுவந்தேன்
நீர்பசியாறி போகவேண்டும்
அப்போது வினாயகனும் அன்புடனே ஏதுசெய்தார்
அதைப்பார்த்து வினாயகனும் பசியார வேணுமென்று
கோபிக்க வந்தவனும் குளிர்ந்தமுகம் தானாகி
ஆவலுடன் உட்கார்ந்தார்
அந்தநல்ல சேதிதன்னை அரனாரும் தானறிந்து
தக்கனிட யாகமது முக்கியமாய் செய்கையாலே
ஆதி சிவனார்க்கு அங்கமெல்லாம் வெந்ததுகாண்
நெற்றியில் வேர்வைதண்ணீர் நிலத்திலே விட்டெறிந்தார்

வேர்வையிலே தான் பிறந்தார் வீரபத்திரர் அப்பொழுது
யீஸ்பரனார் எதிரேவந்து நின்றாரே வீரபத்திரன் அடியேனை
அழைத்ததென்ன ஆண்டவனே சொல்லுமென்றார்
அப்பொழுது யீஸ்பரனும் அன்புடனே சொல்லலுற்றார்
நம்மை இகழ்ந்ததக்கன் நல்லவேள்வி செய்கின்றான்
அந்தநல்ல வேள்வி தன்னை அழித்துவர வேணுமென்று
அந்தமொழி கேட்டுமவன் ஆனதொரு வீரபத்ரன்
பூத கணங்களுடன் புறப்பட்டார் அப்போது
அகோரமாய் தான்நடந்தார் ஆனை படைகளுடன்
பூமி யதிரவேதான் பூலோகம் கிடுகிடன்ன
யாகசாலை தேடியேதான் அதிசீக்கிரமாய் வந்தாரே
அப்பொழுது வீரபத்திரன் அழித்துவிட்டார் யாகம்தன்னை
தேவர்கள் எல்லோரும் திரமாக ஓட்டமிட்டார்
தக்கன் தலைஅருத்து எக்கியத்தில் தான்போட்டார்
அங்கிருந்த மன்னவரை ஆக்கினைகள் செய்துவிட்டார்
விக்னேஸ்வரன் தலையை வெட்டியெரிந்து விட்டார்
உதிர முடனேதான் ஒருநொடியில் சங்கரித்தார்
ஆனந்த மாகவேதான் அரனிடத்தில் தான்சேர்ந்தார்
சாஷ்டாங்க மாகவேதான் சரணமென்றார் அப்பொழுது
ஈஸ்பரரும் அன்பாய் மனமகிழ்ந்து யாகத்தை இப்பொழுது
அழித்தீரோ என்றுகேட்டார்
அப்போது வீரபத்ரன் அன்பாக சொல்லலுற்றான்
தக்கன் தலையருத்து சகலரையும் கொன்றுவிட்டேன்
விக்கினரை தலையருத்து வீசி எரிந்துவிட்டேன்
அங்கிருந்த மன்னவரை ஆக்கினைகள் செய்துவிட்டு
என்றுசொல்லி வீரபத்ரன் இருந்தாரே அப்பொழுது
அந்தமொழி தான்கேட்டு ஆனதொரு யீஸ்பரனும்
சிந்தை மகிழ்ந்துமிக சொல்லுகிறார் அப்பொழுது
உன்தமயன் விக்கினரை கண்டீரோ வீரபத்ரா
அப்போது வீரபத்ரன் அன்புடனே சொல்லுகின்றார்

நானறியேன் என்றுசொன்னான் ஆனதொரு வீரபத்ரன்
அப்போது யீஸ்பரனும் அன்புடனே ஏதுசெய்தார்
பிள்ளையாரைத் தானெழுப்பி பிரியம்வைத்தார் யீஸ்பரனும்
தக்கனையும் கூடவேதான் தயவாகத் தானெழுப்ப
எழுந்தார் யீஸ்பரனும் எக்கியத்தைக் காட்டவேத்தான்
அப்போது வினாயகர்க்கு அவர்தலையைக் காணாமல்
ஆனை தலைஎடுத்து அவர்கழுத்தில் தான்பொருந்த
தக்கன் தலைதானும் தானுமிக்க காணாமல்
ஆட்டுக்கிடா தலையை அவர்கழுத்தில் தான்பொருத்தி
இருவரையும் அப்போது எழுப்பிவிட்டார் யீஸ்பரரும்
ஆண்டவனார் கண்டத்தில் அனைவோரும் வந்தார்கள்
அப்போது யீஸ்பரர்க்கு அதிககோபம் உண்டாகி
தக்கனுடன் கூடியேதான் யாகங்கள் செய்தாரென்று
தேவர்க ளெல்லாரும் திரமாகக் கண்டுவந்து
ஆங்காரம் கொண்டு அதிகமாக செய்யுமென்றார்
சூரப்பிரம்மா வைத்தான் சும்மாயிருக்கச் சொல்லி
அனுகிரகம் செய்துவிட்டார் ஆண்டவனார் அப்பொழுது
இப்படியாகவேத்தான் இருக்குமந்த வேளையிலே

சூரன் கதை

சூரபத்மன் தாருகன் சுத்தவீரன் சிங்கமுகன்
மூவர்களும் தான்கூடி முக்கண்ணரை தான்தேடி
ஆதி சிவன்நாடி அனேக தவம்புரிந்து
பஞ்சாக்கினியில் நின்று பெருந்தவங்கள் தான்செய்ய
தசகனை தானெடுத்து தர்ப்பரனை தான்தரித்து
தணலிலே தான் போட்டு தபசு இருந்தான் சூரனவன்
அனேகதவம் புரிந்தான் ஆங்கார சூரபத்மன்
சதாசிவனை தான்துதிக்க சாம்பசிவனும் மிக்க
பரமன் மனமகிழ்ந்து பார்வதியுடனே வந்து
தவத்துக்கு தான்மகிழ்ந்து தர்பரனார் ஏதுரைப்பார்

என்னை குறித்து நீங்கள் இப்படி தவமிருக்க
உனதுறுதியைத் தான்கண்டு புகுந்துநான் வந்தேனிப்போ
என்னவரம் வேண்டுமென்று யீஸ்பரனும் தான்கேழ்க்க
அப்பொழுது சூரனவன் அன்புடனே ஏதுகேழ்ப்பான்
சம்போ சாதிசிவனை சக்திஉமை நாயகனே
சதிருடனே சொல்லுகிறேன் சங்கரனே கேளுமையா
ஆயிரத்தெட்டு அண்டம் அடிகலமெல்லாம் ஆளவேண்டும்
ஆரும் எதிரில்லாமல் ஆண்டு இருக்கவேண்டும் - நான்
ஐந்து முகத்தாலே அழியாமல் இருக்கவேண்டும்
தேவர்களும் மூவர்களும் தினம்தினம் பணிய வேண்டும்
சர்வஜீவ ஐந்துவினால் நான்சாகாமல் இருக்கவேண்டும்
இந்தவரம் எந்தனுக்கு யீஸ்பரரே தாருமையா
என்றுசொன்ன சூரனுக்கு ஏதுரைப்பார் யீஸ்பரனும்
சொன்னதொரு சூரனுக்கு சூட்சமுடன் ஏதுசொல்வார்
அப்படியே வரமளித்தேன் அன்பான சூரகனே
அறிவித்து தான் மறைந்தார் அன்னல் சிவனாரும்
விடைபெற்று சாம்பசிவனும் வெள்ளியங் கிரியமர்ந்தார்
பரமனார் வரமளித்து பாங்குடனே சென்றபின்பு
வரம்பெற்ற சூரனவன் வந்தானே வையகத்தில்
தேவர்களைத் தான்பிடித்து சிறையில் அடைத்துவிட்டான்
தேவர்களை எல்லாம் முன்னேஅழையும் என்றான்
முனிவர்களை தான்பிடிப்பான் மூர்க்கமுள்ள சூரனவன்
கர்பமிக மங்கையரை கர்ப்பழிப்பான் சூரனவன்
ஆங்கார சூரனவன் ஆரும் எதிரில்லாமல்
ஆண்டுவரும் நாளையிலே அருந்துன்ப மானவரும்
தேவர்களும் தான்கூடி தேம்பி அழுதார்கள்
வைகுண்டம் வந்தார்கள் வாசவனைக் கண்டார்கள்
வந்தவர்க ளெல்லாம் வகையுடனே சொன்னார்கள்
வாசவனும் தான்கேட்டு வளர்கயிலைப் போவோமென்றார்
வாருங்கள் என்றுசொல்லி வெள்ளியங்கிரி வந்தார்கள்

ஆதிசிவன் பக்கத்திலே அய்யனும் போனார்கள்
அரனே கங்காதரனே ஆண்டவனே அபயமையா
ஆங்கார சூரனுக்கு அதிகவரம் தான்கொடுத்தீர்
கேட்டவரம் நீர்கொடுத்தீர் கர்வமுள்ள சூரனுக்கு
எங்களை சிறைவைத்தான் இறக்கமில்லா சூரனவன்
முனிவர் தனும்அழிப்பான் மூர்க்கமுள்ள சூரனவன்
சூரனைத் தான்ஒழித்து சுகப்படுத்த வேணுமையா
சூரன் உபத்திரம் சொல்ல முடியாது
என்றுசொல்லி தேவரெல்லாம் யீசன் மனமிரங்கி
தேவர்களை நீங்களிப்போ தேங்கிப் புலம்பவேண்டும்
சூரனை நான்ஒழித்து சுகத்தைக் கொடுக்கிறேன்
சீக்கிரத்தில் சூரன்தன்னை ஜெயித்து விடுகிறேன்
ஆகையினால் அண்டர்களே அமரலோகம் போயிருங்கள்
என்றுசொல்லி யீஸ்பரரும் இருக்கின்ற வேளையிலே
அப்பொழுது யீஸ்பரரும் அன்புடனே ஏதுசெய்வார்
யீஸ்பரரும் யீஸ்பரியும் இன்பமாய் தானிருந்தார்
சூரனை சங்கரிக்க சுப்பிரமணியர் தான்பிறக்க
அசுரர்களை சங்கரிக்க ஆங்காரமாய் தான்பிறந்தார்
சுப்பிரமணியர் அப்பொழுது சூரனோடு போர்புரிந்தார்
சூரனைசங் காரம்செய்தார் சுப்ரமணியர் அப்போது
சூரனும் தான்மடிந்தார் சுப்ரமணியர் வேலினாலே
அப்பொழுது தேவரெல்லாம் ஆனந்த மானர்கள்
இமயகிரி சாரலுக்கு ஏகினார் யீசனுமே
உதயகிரி சாரலுக்கு உத்தமனார் தானேகி
தக்ஷிணா மூர்த்தியைப்போல் உக்கிரமும் உண்டாகி
தேவன் வடிவம்கொண்டு.......
நிஷ்டையிலே தானிருந்தார் நிமலரும் அப்போது
யீசன் தவமிருந்து இருள்வந்து மூடியது
அஷ்டாங்க யோகமெல்லாம் நிஷ்டைகளை தான்புரிய
ஆயிரத்தெட் டண்டம் அனல்பத்தி வேகுதுதான்

எங்கும்அனல் வீசரது யீசன் தவமிருக்க
அண்டத்தில் உள்ளவரும் அமரர்களும் தான்கூடி
ஆலோசனை செய்து யாராலே இக்கொடுமை
ஆனாலும் தெரியவில்லை அனேகநிஷ்டை தான்புரிய
அனலாய் எரிகிறது ஆபத்து நேர்ந்ததென்று
ஒருவிதமும் தெரியவில்லை ஆலோசனை செய்ய
அங்குவந்த நாரதரும் வானவர்க்கு ஏதுசொல்வார்
அரனார்க்கு அஞ்சுதலை எல்லோரும் பார்த்திருப்பீர்
பிர்மாவுக்கு அஞ்சுதலை பிரகாசமாய் இருக்கும்
அஞ்சு சிரசிலொன்றை அரனார் அறுத்துவிட்டார்
பிரமன்தலை அறுத்தவுடன் தயங்கி மதிமயங்கி
பிரமஸ்தி சுத்தியப்போ கேவலமாய் திரிந்தார்
எறந்து பரந்துண்டு எங்கும்நிலை கொள்ளாமல்
பிச்சை எடுத்துண்டு பித்தம் பிடித்தவர்போல்
மயானத்தில் போய்படுத்து மாயாண்டி தான்உறங்க
கைலாச வாசவனும் கண்மூடிக் கொண்டுறங்க
கண்கள் மூடிக்கொள்ளவே கணமாய் இருளாச்சு
அவர்உறக்கம் பெரிதாச்சு உலகம் இருளாச்சு
பிர்மாசுரர் பாவியலே பாழாச்சி லோகமெல்லாம்
கைலாச வாசகனும் கண்திறக்காமல் போனால்
உலகம் வெளியாகாது ஒருவர் பிழையார்கள்
ஈசனாமவர்கள் உண்டானால் எல்லோரும் தான்பிழைப்பார்
ஆலோசனைகள் செய்ய அங்கிருந்த நாரதரும்
அப்பொழுது ஏதுசொல்வார் ஆரோக்கியா புரத்தை
ஆண்டுவரும் மன்மதனால் அவர்தவத்தைத் தானழிக்க
ஆகுமென்றார் நாரதரும் எல்லோரும் தான்கேட்டு
நாரதனார் சொல்கேட்டு நல்லதென்று தேவரெல்லாம்
ஆரோக்கியா புரத்துக்கு ஆளனுப்ப வேண்டுமென்று
அழகு மணிசுருளை அழகுமுத்திரை தான்போட்டு
தூதுவரைத் தானழைத்து சுருலோலை தனைகொடுத்து

ஆரோக்கியா புரமாலும் அங்குஜவேல் மன்மதரை
அழைத்தோடி வாருமென்று அனுப்பினார் தூதுவரை

தூதுவர் போதல்

ரதிக்கேற்ற மன்மதற்கு ரத்னகிரீடம் கொடுத்தார்
பெண்களுக் கேற்றதொரு பூச்சக்ர குடைகொடுத்தார்
பட்டாடை ஆபரணம் பஞ்சவர்ண சாலுவையும்
பதினெட்டு ஆயுதமும் பரிவாகத் தான்கொடுத்து
கிளிவாகனம் கொடுத்து கின்னரர்கள் தானெழுந்து
வானவர்கள் எல்லோரும் வரவழைத்தார் என்றுசொல்லி
நலமாகத் தான்நடந்தார்

ஆரோக்கியா புரம்தேடி அஞ்சாமல் வருகையிலே
மாயா புரிதேடி வருந்தி வருகையிலே
கற்பூர வனந்தேடி கணமாய் வருகையிலே
காடு மலைதாண்டி கரியமலை தான்கடந்து
வெய்யலில் தான்நடந்து மேனியுருகிப் போய்
தண்ணீர் தாகங்கள் தாகத்துடன் தான்நடந்தார்
குளிர்ந்த நிழல்தேடி தூதுவரும் ஓடிவந்தார்
மலையும் காடும்தாண்டி வருகின்ற வழிதனிலே
சாலைகளும் தோப்புகளும் சரமுடனே கண்டார்கள்
தோட்டம் துறவுகளும் தூதுவர்கள் கண்டார்கள்
தோட்டத்து அருகினிலே தூதுவர்கள் ஓடிவந்தார்
நந்த வனத்தருகில் நலமாய் நடக்கையிலே
சிங்காரத் தோப்புகளும் ஜில்லென்று தானிருக்க
நாலுதிக்கும் தான்பார்த்து நலமாய் வந்தார்கள்
யாருடைய தோட்டமென்று எண்ணமிட்டார் தூதர்களும்
எவருடைய தோட்டமென்று அளவிட்டார் தூதர்களும்
மன்மதனார் தோட்டமென்று மனமகிட்சி கொண்டார்கள்
ரதிதேவி தோட்டமென்று நலமாக தானிரிந்தார்

மந்தார பூவுகளும் மரிகொழுந்து வாசனையும்
மல்லிகை பூவுகளும் மகுடம்பூ தானிருக்க
முகம்விரிய செண்பகமும்....
பாரிஜாத புஷ்பங்களும் பன்னீரும் பூத்திருக்கும்
வெட்டிவேர் வாசனையும் மேதினியில் வீசுவதும்
சந்தன விருஷங்களும் ஜவ்வாதுமணம் வீசுவதும்
கற்பூர வாடைகளும் கலந்துமிக வீசுவதும்
கொம்பில் பழுத்ததொரு கோதுபலா மாங்கனியும்
வேரில் பழுத்ததொரு வெடித்த பலாப்பழமும்
குளஞ்சி பழுத்திருக்கும் கோதில்லா தேன்சொரியும்
தென்னைமரச் சாலையிலே செவ்விளநீர் தொங்கிடுமாம்
கொய்யாப் பழங்களும் கொத்தோடு சாய்ந்திடுமாம்
மாதுளம் பழங்களும் வாய்வுரித்து வாசமிடும்
கரட்டானை சிங்கங்களும் கலந்து விளையாடுவதும்
மானுங் கிளிகளும் மருவி விளையாடுவதும்
பன்றியும் கரடிகளும் பாய்ந்து விளையாடுகிறதும்
ராஜாளி கொக்குகளும் நடந்து விளையாடுவதும்
மந்தி குரங்குகளும் நடந்து விளையாடுவதும்
வெள்ளைக் கிளிகளும் விதவிமாய் பேசுவதும்
பச்சைக் கிளிகளும் பலவிதமாய் பேசுவதும்
சின்ன கிளிகளெல்லாம் சிந்துகவி பாடுவதும்
பஞ்சவர்ண கிளிகளும் கொஞ்சிவிளை யாடுரதும்
கண்டு மகிழ்ந்தார்கள்.....
பசியார வேணுமென்று பரித்தார் கனிவகைகள்
தின்று பசியாரி திரிந்தார் வனங்களிலே
நந்தவன மெல்லாம் நாடிவந்தார் ஓடிவந்தார்
திருக்குளத்தை கண்டார்கள் சித்தம் மகிழ்ந்தார்கள்
தண்ணீர் இளைப்பாரி தலைமுழுகி கொண்டார்கள்
குளத்து அதிசயத்தை கும்பலாய் பார்த்தார்கள்
பூஜைக்கு ஓர்துறையும் சொல்லமுடி போகாது

மன்மதனார் தான்குளிக்க உயர்ந்த படித்துறையாம்
ரதிதேவி நாயகிக்கு ரத்தின படித்துறையாம்
தாதிமார் தான்குளிக்க தனியே படித்துறையாம்
நல்லதுறையும் பார்த்தார் நலமான தூதர்களும்
இந்த அதிசயத்தை இன்பமாய் தான்பார்த்து
தங்க மிழைத்ததொரு ஜெயகண்டிகை கண்டார்கள்
தூணுக்குத் தூணுக்குத் தூங்கா விளக்கெரிய
முத்து சரங்கள்தான் முகமெல்லாம் தான்துலங்க
மகர சங்குஊத மத்தளங்கள் ஓசையிட
மங்கையர்கள் நடனம்செய்ய வாத்தியங்கள் தான்முடங்க
மகரமுரசு தானதிர மண்டலத்து சந்திரன்போல்
அரனுடைய வான்பாங்கு ஆதி பதினெட்டுடனே
அன்புடனே தானெடுத்து அனையோரும் வந்துநிற்க
அப்பொழுது மன்மதரும் அழகு வசந்தருடன்
அழகு ரதமேறி அன்னக் கிளிபூண்டு
அழகுரம்பை சேனையுடன் அண்டம்ரெண்டும் தத்தளிக்க
அழகுள்ள மன்மதரும் அமரலோகம் தான்நடக்க
அப்போரதி தேவிகண்டு ரத்னமணி ஊஞ்சல்விட்டு
அன்னேரம் தானெழுந்து ராஜா ஒயிலுடனே - அந்த
அமரலோகம் போகவேண்டாம் அடிபணிந்து தெண்டநிட்டு
அன்னைரதி சொல்லையிலே

மனமதன் சொல்

ஆக்ஷ்க்ஷி காமாக்ஷி விசாலாக்ஷி மீனாக்ஷி
ஆர்வீழ்க்ஷி கார்புரக்ஷி பேர்நடத்த கார்நடச்சி
பேர்கடச்சி கார்நடச்சி......
ஆரநத்தி காரநத்தி சீரநத்தி நாரநத்தி
அம்பாள் ஜெகதம்பாள் மீனாம்பாள் சாரதாம்பாள்
ஆதிசக்தி பத்தினியாள் ஜோதி கதிநின்று
அம்பிகை பெண்வாளையவள் இன்பமுடன் ஈன்றெடுத்த

அரிவையே சிகாமணியே பரிவையே சிரோன்மணியே
அழகு மனோன்மணியே திகழுமென் கண்மணியே
அன்னமே ரதிக்கிளியே வர்ணமயிலே வுனது
அதைத்தசித்ர ஆபத்தைநான் மதித்துகவி சொல்வனடி
அருங் கூந்தலுக்குநிகர் கரங்கொன்றை நாருவம்
அண்டுகூந்தல் பணையும் தண்டுளவும் கார்மணலும்
அழகு மூன்றுபிறையோ யிலகுநெற்றி புருவமது
அரைத்தாலும் மொவ்வாது குறைந்து உரைந்திடுமே
அரும்புவேம் வெண்பிரையே அடரும்குமிழ் செண்பகமே
அடிதிடமுள்ள நாசியடி அற்புதமே உன்காதுரெண்டும்
பொற்புள்ள வள்ளி சத்திரியே..........
அமைந்தகன்னம் கண்ணாடி சமைத்தசர சானையடி
அந்தமுள்ள உன்பல்வரிசை சனமில்லா ஏபவளம்
எண்ணமே நீநகைத்தால் எங்கும் பிரகாசமடி
ஆடும் மயிலினமே தேடும் திரவியமே
அமுர்த சொல்வழகி நேசமுடன் பழகி
ஆனந்தமே கொடுக்கும் மோகன பசுங்கிளியே
ஆண்புலியை தோற்கடிக்கும் சப்ரமுள்ள உந்தன்முகம்
அசைந்தகமுகோ ரதியே ஒசந்தவரிக முத்தே

(இதுவு மது)

ஆயன் படைத்ததோ அழகைநியமித்து சொல்வனடி
ஆதிசேடனும் மதிப்பான் மாதரசே ஒத்தகங்கை
அடர்ந்து திரண்டுவிம்மி அங்கத்தின் மீதிலேதான்
அம்பொன் குடம்கவசம் பம்பரம் பந்துகிண்ணம்
ஆணிமுத்து செப்பனிட்ட மணியோர்க்கும் பூங்கவசம்
ஆகும் மென்னலுமது போகசுகம் மில்லையடி
அந்திர மின்னர்கொடியே நிந்தைசெய்யும் உந்தன்இடை
அறியாத மாதர்களும் அரசர்முனிவர் சித்தர்களும்
இந்திரனும் சந்திரனும்...

அல்குல் கனியிலொன்று சொல்வதற்கு மாலாது
அறிந்துரித்த வாழைத்தண்டும் பெருத்தயானைத் தும்பிக்கையும்
அபரஞ்சி யிழைத்ததூணும் உபயோகஸ்த கம்பமென்று
ஆரணங்கே மோகனமோ கிடைக்காத பொக்கிஷமே
காலவினை பங்கமிடும் யிலகுமுழங் காலிடையே
அன்னமே உன்கணுங்கால் என்னவென்று நானுரைப்பேன்
ஐந்துவிரலாலே நீயும் சாயிந்ததொப்ப மென்றிடினும்
அரிவையாரே யுந்தனுக்கு சரியாக மாட்டாதே
அந்தமிடும் பாதமது அந்தமலர் மாந்துளிரோ
அரவம்பட மேனியிலும் கருடன்கண்டால் முகத்தில்
அந்திவண்ணன் பெற்றெடுத்த சுந்திரமுள்ள பெண்ரதியே
ஆயிரம்கண் இந்திரனும் அனுப்பிய ஓலையிலே
தனிப்படவே வாருமென்று எழுதி யிருந்ததுகாண்
அடிபேரான பெண்ரதியே புத்தியுள்ள கண்மணியே
ஆகையினால் இதற்கு போகவிடை தாருமடி
அடிமயிலே என்றுறைத்தார் பிடிவாதமாய் மதனும்

தாதிசொல்

அங்கம் பதரிரதி திங்கள்முகம் பார்த்து
அல்லவே என்கணவா மெல்லிய குற்றுணர்வா
அரனார் மருமகனே திருமால் மருஞ்சுதனே
அடியாளை இங்கேவிட்டு கெடுமிந்திரன் சொல்கேட்டு
அங்குஜனே நீர்போனால் இங்கேநான் புலம்பிடுவேன்
அரைநாழிகை யுனைபிரிந்தால் நிரையில் குறைந்திடுவேன்
அல்லும்பகலும் உந்தன் சொல்லை நினைந்திடுவேன்
ஆனாலும் உன்பிறகே நானும் வருவேனருகே
ஆகம விதிப்படிக்கு தோகைரதியும் வணங்கி
ஆசார சோடசம் சாரமுடனே தொழுது
அன்பாக சொல்லுகின்றார் இன்பரதி அன்னேரம்

மதன்சொல்

அழகை படைத்தவளே புகழை யணிந்தவளே
அல்லி மலர்சரமே மல்லிகை பூமணமே
அமுர்த மொழியாளே குமுர்த விழியாளே
அன்ன நடையழகி என்னுடனே பழகி
ஆசைமிகுந்த பெண்ணே பாசமிகுந்த கண்ணே
ஆயிரம்பொன் மாற்றுபெற்ற நேய பதுமையொன்று
அமைத்து தருகிறேன்யான் சமைத்ததின் முகம்நோக்கி
அலங்கார மாயிருக்கும் நலங்குலைந்து வாடியரில்
அவ்விடத்தில் எந்தனுக்கு பலவினைகள் வந்ததென்று
அறிந்துகொள் ளென்றுரைக்க தெரிந்துரதியும் கலங்கி
ஐய்யய்யோ வென்றலரி கையைபிடித்துக் கொண்டு
ஆதிசிவன் தன்மகளும் ஏதுரைப்பார் அப்பொழுது

ரதிசொல்

காம ராஜேந்திரனே பூமானே சீமானே
கரியவன் தன்மகனே அறியவர்க் கிசைந்தோனே
கட்டழகனே மதனேஎனை தொட்டணைந்த கோமானே
கன்னி பிராயத்தில் சின்னஞ்சிறு வயதில்
கல்யாணம் செய்துவிட்டு இலகுபருவத்தி லென்னை
கட்டி யணையாமல் யிஷ்டமுடன் சேராமல்
அந்தகருது மிந்திரனனுப்பும் பெருந்தூதர் கொண்டுவந்த
காகிதத்தை நீர்பார்த்து ஆயுதங்களை எடுத்து
காரணரே போரேனென்று ஆரணத்தி லில்லாமல்
கருத்தை யுரைக்கலுற்றீர் ஒருத்தி தணித்திருக்க
கால்நாழி யுன்னைவிட்டு மால்மகனே வேறுபட்டு
கலைப்பிரிந்து மானதுபோல் மலைவிழுந்த வீடதுபோல்
கற்காத வித்தையைபோல் நிரைநிற்காத பகுதியைப் போல்
கணவரில்லா பெண்ணைப்போல் மணமில்லா பூவைபோல்
கதிரில்லா வானம்போல் எதிரில்லா வீரனைபோல்

கார்மழையில்லா பயிரைபோல் நேரிழையில்லா மானதுபோல்
கரும்பைவிடும் ஆலையை போல்தான் விரும்பிவாரா மாதரைப்போல்
கஞ்சமில்லா குளம்போல் குஞ்சரமில்லா படைப்போல்
கவிசொல்லா வானரைப்போல் சைவமில்லா ஞானியைபோல்
காவலில்லா நாகரைபோல் கோவிலில்லா ஊரைபோல்
காரியமில்லா தொழிலைபோல் வீரியமில்லா வானரைப்போல்
காவலில்லா பயிரதுபோல் பாலரில்லா சபையதுபோல்
காற்றில்நட்ட பாய்மரம்போல் சேற்றில்நட்ட கம்பம்போல்
நான்கலங்கி யழுதிடுவேன் நான்புலம்பி நலங்குவேன்
கர்த்தனே நாமிருவர் நித்தம் மனமகிழ்ந்து
கலந்திருப்போம் வாருமென்று கன்னிரதி தேவியரும்
என்றுரைத்தார் அன்னேரம்

மதன்சொல்

அன்னமே தாரமேஎன் அமுத பசுங்கிளியே
அழகுமணி கோகிலமே அரும்பான மல்லிகையே
அற்புத சிங்காரமே அரும்பவழி ரத்தினமே
அபரஞ்சி தன்ஒளியே அலங்கார பெண்ணரசே
ஆணி கனகமுத்தே ஆபரண பொக்கிஷமே
அம்புவியல் பெண்டமுதே அரம்பயற்கு நாயகமே
ஆதிசிவன் புத்திரியே
ஆசைக் குகந்தஎந்தன் அன்பான காதலியே
இந்திர லோகமதில் அயிராவத மேகும்அந்த
ஆயிரங்கண் இந்திரனார் அனுப்பினார் தூதர்களை
ஆகையினால் நானும் அரைநொடியில் போய்வாரேன்
அதையறிந்து வாரனடி அன்பாய் சிலவுதந்து
அனுப்பு மென்பார் மன்மதரும்

ரதிசொல்

அமரர்க்கு அதிபதியோன் ஆயிரங்கண் இந்திரனார்
அனுப்பினார் தூதரென்று அன்பாக சொல்லவந்தீர்

அரசுக்கரசே எந்தன் அமரர் சூடாமணியே
ஆயனார் யீன்றெடுத்த அன்புள்ள என்கணவா
அமரலோகம் நீபோனால் அநர்தம்வந்து நேர்ந்துவிடும்
அபகேடு செய்திடுவார் ஆகாது என்கணவா
அழகுள்ள என்கணவாநான் அடியாள் அலைந்திடுவேன்
ஆருமில்லை எந்தனுக்கு அனாதியாய் நின்றிடுவேன்
ஆசையினால் என்கணவா அழகுமணி மண்டபத்தில்
அழகுரத்ன சிம்மாதனத்தில் அமர்ந்து கொலுவிருந்தால்
நல்லது என்றுரைத்தால் நாயகியாள் ரதிதேவி

மதன்சொல்

காவி யிளங்குயிலே கானகாத்துப் பெண்கிளியே
காந்தியுள்ள வண்டினமே காடை புறாயினமே
கணக்கெழுதும் புஸ்தகமே கருத்துள்ள மந்திரியே
கலைமான் வடிவிணமே கன்னி யிளங்குயிலே
காமன் கனகேநில் கலைக்ககேற்ற வல்லவியே
கஸ்தூரி நற்புனுகு சுதம்பப்பொடி வாசனையே
கைநிறைந்த பெண்ரதியே கருத்தாக நீர்கேளும்
கங்காதரன் உன்தகப்பன் கனமாக யோகமுடன்
கடுந்தபசில் இருப்பதினால் கலங்கியே தேவரெல்லாம்
காரியமாய் தான்கூடி கங்காதரன் தபசை
கண்டறிந்து வாரேனடி போகவிடை கொடடி
பொறுமையுள்ள பெண்ரதியே

ரதிசொல்

நாயனே என்கணவா மாயவனார் தன்புதல்வா
நகராண்ட மன்னர்களின் புகழும் நளசக்ரவர்த்தி
கரும்பிராஜன் பெற்ற கருந்தமிழ் ஏந்தியவன்
மங்கையை பெண்ணை ஏன் அவன் மணம்செய்தான்
நல்லதாகட்டு மென்று சொல்லிஅவர் தானிருந்தார்
நாகம்போலவே சீறி வேகமுடனே பூஸ்கரன்தன்

தன்நெஞ்சில் புகுந்த வன்நெஞ்ச மாயவனை
நளராஜனுக் கெதிராய் நற்பகடை யாடவைத்து
நங்கைதமி ழேந்திப்பார்த்து அங்கமெல்லாம் பதறி
நடுக்கமுடனே நளனை கெடுக்க சூதாடுவதும்
நமக்குயிது சரியல்ல உமக்கழகு இல்லையிது
நமஸ்கரிக் கிறேனென்று தமயேந்தியும் நின்று
நால்வேத சாஸ்திரத்தால் நூலால் வழியுணர்த்தி
நளராஜன் கேளாமல் ஸ்ரமாய் வந்துதித்து
நாடுநகர்வர ஓடுமுதல்...
நஸ்டமாய் சூதாடி இஸ்டமாய் தோற்றுவிட்டு
நாயகியும் பிரிந்து நேயர்களிடம் போயி
கஸ்டங்களை பெற்று வந்தார்.
நாதாநான் என்னசெய்வேன் தீதாய் நீ எண்ணாமல்
நல்லபுத்தி நானுரைத்தால் பில்லபுத்தி நீ நினைத்து
நான்போறேன் என்றுசொல்லி நாயகனே என்கணவா
அடுக்காது என்றுசொன்னால் நடுக்கமுள்ள பெண்ரதியும்

மதன்சொல்

கலாப மயிலேகுயிலே கலாப ஒயிலேமயிலே
கற்பகமே பொற்பகமே அற்புதமே விற்பனமே
கண்மணி சிரோன்மணியே பொன்மணி மனோன்மணியே
கருத்தினில் லிசைந்தமட்டும் விருத்திக்க சொல்வனடி
காப்புவியில் வாழ்க்கையிது நீர்மேல் குமிழியடி
கடும்வாழ்வில் நம்பாதே படுகுழியில் தள்ளிவிடும்
கருவிகள் தொன்னூற்றாரு எலும்புசதை நரம்புடனே
கால்ரெண்டுடைய பொம்மை மேல்கொண்டு எடுத்துநம்மை
கதிமோஷம் வழியைவிட்டு மதிகெடுக்க செய்யுமடி
கண்ணுக்குள் பார்வையடி மண்ணுக்குள் நாற்றமடி
காரிழையே தேவரிடம் நேரிழையே நீஅனுப்பும்
கர்பம் வரைக்கும் அற்புதமாய் பேர்வளர்க்கும்

கலங்காதே என்றுசொன்னால் கட்டழகி உன்நினைப்பால்
அற்புதமாய் பேர்விளங்கும்
கலங்காதே என்றுசொன்னார் கட்டழகன் மன்மதரும்

ரதிசொல்

புண்ணியரே என்கணவா மண்ணுலகிலே இருக்கும்
பொன்னை விடுமோநீரும் தன்னை விடுமோஆசை
பூவைவிடுமோ மனமோ இந்தநாவை விடுமோருசியும்
புழுதிவிடுமோ நிலத்தை அந்தநிழலுவிடுமோ மரத்தை
புன்னைவிடுமோ உதிரம்தன் கன்றைவிடுமோ பசுவும்
புனுகைவிடுமோ வாசம்அந்த தினையைவிடுமோ கிளிகள்
பொருளைவிடுமோ ஆசைஅந்த அருளைவிடுமோ பூசை
பூனைவிடுமோ எலியைஅந்த தேனைவிடுமோ யீயும்
புத்திவிடுமோ மனதைஅந்த சக்திவிடுமோ சிவனை
புருஷன்விடுவானோ பெண்டை ஓய்அரசே நீயுமென்னை
பொட்டெனவே விட்டுயிந்தரன் இஷ்டபடி நீர்போனால்
பாவியிருந் தாவதென்ன போகாதீர்நாம் இருபேரும்
இந்தரக போகத்துடனே பொங்குடனே வாழ்வோமென்றாள்
மங்கைரதி அப்பொழுது

மதன்சொல் - ராமன்கதை

சீரிலங்கும் பெண்ரதியேஅடி நேரிழையே கேளுமடி
சிறக்கும் அயோத்தியினில் இருக்குமந்த சாரதன்றன்
சீர்வதத்தால் அக்கினியில் கார்வண்ணனும் பிறந்து
சிலைவளைத்து மாலையிட்டு பெருமலைஎடுத்து என்தகப்பன்
சீதையை மணம்புரிந்து அந்தபாதகி கைகேசியினால்
சிறுதம்பி லக்ஷ்மணனும் தன்மனைவியுடன் தானும்
சிந்தைநொந்து வனவாசம் வந்துஆரண்ய மதில்
சீரிவந்த தாடகியைஅங்கு மீறிஉயிர் வதைத்து
சீக்கிரத்தில் சூர்ப்பநகயை மூக்குதலை யரிந்து - அவள்
சிக்காவாலி உயிர்தன்னை மிக்கமென்பால் கொடுத்துவண்ணம்

சீதையின்மே லாசையுற்ற காதக யிராவணனை
சிரமும் மருத்து பரிசோதனையுட னேவந்து
சித்துதலையும் முடைத்து வலுமெத்த கும்பகர்ணனையும்
சிந்துபடிக் குதிரம் முந்தஉயிர் போகடித்து
சித்திபெற்ற மூலபலம்அது எத்தனையே வத்தனையும்
சிதைத்துமனங் களித்து சிதைத்துவதை வதைத்து
சீராய் விபீஷனுக்குஅந்த பேரான லங்காபுரியை
சிங்கார மாய்தரித்து மங்களமாய் முடித்து
சீலனாம் மைந்தனுக்கு பெறுஞ்சேனை யுடன்கொடுத்து
சீதையுடனே கூடி புகழுமை யோத்தினியில்
சிறப்பாகவே சேர்ந்து வெறுப்பொன்று மில்லாமல்
சித்தர்முத்தர் பத்தர்மித்தர் எத்திசையு முற்றமன்னர்
ஸ்ரீராமர் ராமஹரிலும் ஸ்ரீஹரி ஜெயவெனவே
சிரிசில் மகுடம்தரித்து நரசிம்பன் னென்றகப்பன்
ஸ்ரீராமர் தானிருக்கநீ பரியாசமாய் எண்ணாதே
அடிஅன்னமே போகவிடை
சீக்கிரத்தில் நீயருள்வாய்என் பாக்கியவதி ரதியே

ரதிசொல் - சிறுதொண்டன் கதை

ஸ்ரீராமர் யீன்றெடுத்த சீறுள்ள என்கணவா
செப்புகின்றேன் ஒருசேதி திருவேல் நகர்கிரியில்
சிறுதொண்ட பக்தனுக்கு செங்காட்டு நங்கைஎன்று
நற்தேவியுண்ட வர்களுக்கோர் சீராளனே என்று
சிறுபிள்ளை தானுமுண்டு ஜெகத்தினி லன்னக்கொடிகட்டி
சிவயோகி ஜங்கமற்கு தினமும்அன்னம் அளித்து
சிறப்பார் வருகையிலே தெய்வச்செயலாம் ஒருநாள்
ஜங்கமபண்டாரம் அகப்படாமல் தேடித்திரிந்து தொண்டன்
தெருவீதி வருகையிலே திரிபுர மெரித்த யீசன்
சிவயோகியை போல சிறுதொண்டன் எதிர்வரவே
சிறுதொண்டன் தான்பார்த்து தேனோடு பார்த்தமெல்லாம்

தேவரீர் யான்படைப்பேன் சிறுமனைக்கு வாருமென்று
தெண்டனிட் டழைக்கையிலே தேவரும் தான்பார்த்து
மகாதேவர் தானுரைப்பார் - அட
சித்திரம்போல் தானிருக்க சிறுபிள்ளை ஒன்றாகஅது
செப்பும்வயது ஐந்தாக செந்தமிழ் படித்ததாக
சீரான நெற்றதொரு சீர்பெருகி யிருக்கவேணும்
சிரசை தாயார்பிடித்து தீரமாய் தந்தையருத்து - அதை
திவ்வியமாய் கரிசமைத்தால் தின்பனடா உன்வீட்டில்
தேன்சொறிய பதார்த்தமது தின்பதில்லை என்றுரைக்க - அதை
சிறுதொண்டன் தான்கேட்டு நீர்செப்பும்படி படைப்பேன்
என்தேவி சம்மதிக்கவேணும் மகாதேவரே வாருமென்று
செங்காட்டு நங்கையிடம் செப்பவேயவள் சம்மதித்து
சிறுபிள்ளையை தானழைத்து தேவியவள் பிடித்து
சிறுதொண்டன் வாலெடுத்து சேர்ந்திருவரும் அறுத்து
திவ்வியமாய் கரிசமைத்து தேவருக்குத் தான்படைக்க
ஜங்கமரைத் தேடியல்லோ சிறுதொண்டன் வருகையிலே
ஆத்தி மரத்தடியில் அமர்ந்திருந்தார் சிவனும்
ஜங்கமரைத் தான்கண்டார் சிறுதொண்ட பக்தனுமே
வாரும்சுவாமி என்றவரை வருந்தியவன் தானழைக்க
அப்பொழுது ஜங்கமரும் அன்புடனே சொல்லலுற்றார்
ஒரு சிறுபிள்ளை இல்லாமல் சீராய் புசிக்கேனென்றார்
சித்தன்யீசன் தானுரைக்க திடுக்கிட்டு இருபேரும்
ஐயா சிறுபிள்ளை ஒருவனுண்டு தெருவில் விளையாடுகிறான்
ஐயா தேவரீர் புசியுமென்று அந்ததேவியும் தொண்டனுமாய்
சிவசங்கரற்கு தான்சொல்ல தெருவில் அழையுமென்றார்
சிவயோகி சொல்படிக்கி தெருவாசல் படியில்வந்து
சீராளா வென்றழைக்க சிங்காரமாய் பாலன்
தெருவில் விளையாடிவர சித்தங் கலங்கியவர்
சிவனென்று தானறிந்து திருவடியைத் தெண்டனிட்டு
உயிர்ஜீவ முத்தியும்கொடுத்து ஜீவகாருண்ய ரிடம்

ஓய்சித்தஜெகலே நீர்போனால் சிரித்து விழித்திடுவார்
உன்னைத் தீபாய்எரித்திடுவார் என்றுரைத்தாள் அன்னைரதி

மதன் சொல்

பத்தர்முத்தர் சித்தர்தொழும் சத்தியம் பாத்திபாரா
சத்திசித் பரத்மாதா நத்திவிற் பனத்தி சிவ
சத்திய மாயசக்தி மகாசக்தி மாயசக்தி
மாயசக்தி உக்ரசக்தியோளே
காதலி ரதிதேவி பத்தினியே என்மொழிகேள்
பகரும்துவா புரியுகத்தில் ஜெகமாண்ட ராஜர்களில்
பாண்டுராஜன் மனைவி வேண்டியே பெற்றெடுத்த
பஞ்சபாண்டவர் ஐவர் நெஞ்சங் கலங்காமலவர்
பத்தினி திரௌபதியை வெகுவித்வனமாய் மாலையிட்ட
பகையுண்டு குரோதமுண்டு அகமுண்டு துரியனுக்கு
பள்ளிக்கூடத்தில் கற்ற தெள்ளிய வித்தையிலும்
பாதிநாட்டை கொடுக்கும் சேதிமிக தெரிந்தும்
பருவமுடனே ஜகுனி திரிதமகா ராஜனுக்கும்
முக்கியமாய் சொன்னதினால்
பசும்பொன் மணியதனால் யிசையும்மண்டபம் அமைத்து
பாண்டவரைத் தானழைத்து சீண்டியே காண்பித்து
பகடையாய் சூதாடி விகடதுரியன் ஜகுனி
பங்குராஜ்யம் தனையும் பொங்குசட்டி ஓடுமுதல்
பற்றினதும் போதாமல் உத்தமர்கள் மனம்நோக
பக்ஷசமற்ற துரியன்தம்பி துர்சாதனை அனுப்பி
பாரசபை நடுவில்வெகு கோரமாய் திரௌபதியை
பங்கமாய் நிற்கவைத்து அவள்அங்கமதி லிருந்த
பட்டாடை களையுரியஅங்கு நிஷ்டூரமாய் யவனும்
பச்சமாலை யணிந்த விச்சித்ரமாக மாயன்
பண்ணவே துயிலனேகம் பெண்ணா லுடையகூந்தல்
பாரில் பிரண்டிடவும் அவள்சீரி யமுதிடவும்

பார்த்தபீபன் அர்ஜினறும் ஏற்றகெதை வில்லெடுத்து
பருவமுடனே எழும்பஅங்கு தர்மரும் கையமர்த்தி
பதராதீர் தம்பிஎன்று சதுராக சொன்னதின்மேல்
பனிரெண்டு வருடம் காட்டில் பெருத்தவன வாசம்செய்து
இருந்து எங்களிடம் வந்தால்
பாதிநா டளிப்போமென்று ஓதிட திரியோதினறும்
பஞ்சபாண்டவரும் மெத்த நெஞ்சங் கலங்கிவந்து
பாவை திரௌபதையுடன் மேவிநாளை துளைத்து
பாதுகார்த்த மாயவனை தூதனுப்பி போர்முகத்தில்
பற்றிவந்த ஜகுனியையும் வெற்றிபெற்ற துரோணரையும்
பாட்டனென்ற பீஷ்மரையும் ஓட்டும் படுகளமும்
படைவீரர் நடைவீரர் நொடிவீரர் முதல்வரையும்
பந்துக்க ளனைவரையும் விந்தையாக கிருஷ்ணனவர்
பதினெட்டு நாளையிலே விதிகெட்டு போயிடவே
பக்குவமாய் சக்ரத்தால் எக்கில்லா சேனைகளை
பஞ்சுபஞ் சாகபுட்டு வஞ்சகமாக அட்டு
நாடுகளெல்லாம் தருமருக்கு வாகுடனே முடிசூட்டி
பாரதம்முடித்து பூமி பாரந்தனை தீர்த்துவிட்டு
பாலன் பிரகலநாதனுக்காய் கோலமாய் இரண்ணியனை
பங்கமாய் கொன்றமாய நரசிங்க ரூபமாகவந்தோன்
படுபாவி ராவணணை இடிபோல நின்றுகொன்று
பரிஞ்சீவி விபூஷணர்க்கு சிரஞ்சீவியும் கொடுத்து
பாரிலனு மந்தனுக்கு நயந்துமோஷம் அளித்தோன்
பரபிரம்மான ரூபன் வரங்கொடுக்கும் பரந்தாமனை
அவன்பண்ணுங் கோலத்தைநம்மால் எண்ண முடியாது
கண்ணன் பக்கத்திலேயிருக்கயந்த முக்கண்ணன் என்னசெய்வான்
பயப்படாமலே எனக்கு நயமுடனே நீவாக்கு
பளிச்சென்று சொல்லுமென்றார் களிப்புடனே மன்மதரும்

ரதிசொல் - நரேந்திரன்கதை

அல்லவே என்கணவா ஆணழகா சொல்குரேன்கேள்
ஆதியில் நரேந்திரனென் அரசனென் றொருவனுக்கு
அன்னை சாரங்கனென்று அருமைமக னிருந்தான்
அவனுக்கு வயதாகி அருமைமணம் செய்வதற்கு
அனுப்பினார் படைதன்னை அன்பாக வேதியரிடம்
அவர்களுமே தான்சென்று அவனுக்கு ஏற்றதொரு
அழகுசித் ராங்கிதன்னை அன்புடனே கொண்டுவந்தார்
அவளழகைத் தான்பார்த்து அவன்தகப்பன் நரேந்திரனும்
நமேபுணர்வோ மென்று கவனமுடன் தானிருக்க
மகனுக்குத் தெரியாமல் மங்கையிடம் போகையிலே
மங்கைசித் ராங்கியவள் வந்தவனைத் தான்பார்த்து
கிழவனைய் காணாதென்று கேடுவந்து நேர்ந்ததென்று
ஒருவருஷம் விரதமென்று உடனேயவனை ஏமாற்றி
சாரங்கன் வருவானென்று சதிருடனே பார்த்திருந்தாள்
அந்தசமய மதில் விந்தையாய் நரேந்திரனும்
கானகம் தன்னிலேதான் கானவேட்டை யாடசென்றான்
அப்பொழுது சாரங்கன் அவனுடைய தோழனுமாய்
அன்பாய் விலாசமதில் தென்பாகவே கூடி
ஆகாய மார்கமதில் சோக்காய் புறாவைவிட
அன்னை சாரங்கன்புறா அதிவேகமாய் கிளம்பி
சீராய் இறங்கிவிட
அதைகேழ்க சேவகனை அனுப்பினான் சாரங்கன்
அங்கேயிருந் தோடிவந்து தங்களைவரச் சொன்னான்என்றான்
அதைக்கேட்டு சாரங்கன் அவன்மந்திரி சுமந்திரன்
அன்பாக கேழ்க்கையிலே தென்பாக ஏதுசொல்வார்
ஆகாது மன்னவனே அபகேடு வந்துவிடும்
தாயில்லா உந்தனுக்குஉன் தந்தைசெய்த சூதய்யா
தையல்வள்ளி யிடம்போனால் வையகம் தன்னிலேதான்
சங்கையது யாகிவிடும் பங்கம்வந்து நேர்ந்துவிடும்

ஆகாது என்றுசொல்லி அனேகவிதமாய் தடுத்தான்
அதைகேட்டு சாரங்கன் மிதமற்ற கோபமுடன்
அங்கேயவனை தானிருத்தி மங்கையிடம் சென்றுவிட்டான்
அங்கே இருந்ததொரு மங்கைசித் ராங்கியவள்
அவனைப் பிடித்தனைந்து கவனமுடன் சேருமென்றாள்
அப்போதுசாரங்கன் தப்பிதம்நேர்ந்ததென்று பலவித கவனமிட்டு
கச்சையை தானெடுத்து கடுகெனவே ஓடிவிட்டான்
அப்பொழுது சித்ராங்கி அலண்டு மிரண்டழுது
மண்மேல் விழுந்திருக்க மன்னவ நரேந்திரனும்
கானகத்தில் வேட்டையாடி கன்னியிடம் தான்வரவே
கண்டுமிகத் துடித்தார்
கன்னிசித் ராங்கிதன்னை கவனமுடன் கேழ்க்கையிலே
அப்போது சித்ராங்கி அழுது முறையிட்டாள்
பாலன் சாரங்கன் பரபரப்பாய் இங்குவந்து
பலவந்தம் செய்தானென்று பாதகியும் தானுரைக்க
அதைகேட்டு நரேந்திரனும் ஆங்கார கோபமுடன்
மகனென்று பாராமல் மட்டி நரேந்திரனும்
மாறுகால் மாறுகையை வாங்கும்படி செய்துவிட்டார்.
அப்படி போலாகும் அமரலோகம் நீர்போனால்
அநந்தம்வந்து நேர்ந்துவிடும் ஆகாது என்கணவா
நான் நல்லபுத்தி தானுரைத்தால் சின்னபுத்தி நீர்நினைந்து
நான்போறெனென்று சொல்லிநீர் நலமுடனே சொல்லிவந்தீர்
நடக்காது என்று சொன்னவர் ரதிதேவி அப்பொழுது

மன்மதன் சொல் - அரிச்சந்திரன் கதை

அல்லடி பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்கேள்
அய்யோத்தி பெண்டுபிள்ளை அமைச்சனிட வாதையினால்
அவதிவந்து தெரிந்ததை கவனமுடன் கேளடிநீ
தேவேந்திரன் சபையில் தேவரெல்லாம் சூழ்ந்திருக்க
அந்த சமயத்தில் அமரேச னனானவறும்

அங்கிருந்த நாரதனும் அன்புடனே தான்பார்த்து
அவனியாளும் ராஜர்களில் கவனமுடன் பொய்சொல்லா
அரசனொருவ ருண்டோவென்று வரிசையுடன் கேழ்க்கையிலே
அதைக்கேட்டு நாரதரும் வசிஸ்டரை கேழ்க்கையிலே
அப்பொழுது யிந்திரனு தப்பாவசிஸ்டர் தன்னை
அன்பாக கேழ்க்கையிலே யின்பமுடன் ஏதுசொல்வார்
அவனியாளும் ராஜர்களில் கவனமுள்ள என்சிசியன்
அய்யோதி நகராலும் பொய்யில்லா அரிச்சந்திரன்
அவனைவிட யாருமில்லை புவனமதில் என்றுசொன்னார்
ஆகூ வசிஸ்டனேநீ ஓஒஎன்ன சொன்னாய்
அவனுமிக பொய்யனென்று புவனமதில் தானுரைக்க
அங்ஙனமே இருவருக்கும் பொங்குமிக வாதாகி
அதையறிய வேணுமென்று இதயமுள்ள யிந்திரனும்
அனுப்பினார் விஷ்வாமித்திரனை அயோத்திமா நகருக்கு
அங்கிருந்து ஓடிவந்து எங்கமே நில்லாமல்
அரிச்சந்திரன் தன்சபைக்கி பிரியமுடன் தானேகி
ஆஆயான் யாகம்செய்ய ஓஓபொன் வேணுமென்று
அதைக்கேட்டு மன்னவரும் அப்படியே தான்கொடுத்தார்
அதைவாங்கி விஸ்வாமித்ரன் அவ்விடமே தானிருத்தி
அங்கிருந்து வந்தவுடன் அவருடைய மாய்கையினால்
நிச்சமாகரை யனுப்பி பூச்சர குடைகேழ்க்க
ஆகாது என்றுசொல்லி வாகாய் துரத்திவிட்டான்
அனியாய மாதர்வந்து முனிவருடன் தானுரைக்க
ஆங்கார கோபமுடன் பாங்காய் அயோத்திவந்து
அவருடைய ராஜ்ஜியமும் ஆஸ்தான பூஸ்திதியும்
அன்பாய் பரித்துக்கொண்டு தெம்பாய் கடன்சுமந்து
அரும்பாவி நட்சத்திரேசன் கருமியவளை யனுப்பி
கடன்சுமந்து மன்னவனை படாதபாடு படுத்தி
அவனுடைய புவனமதில் ஒரு பொய்யை சொல்லவஞ்சி
அன்பான காசிநகர் தென்பான வீதியிலே

அவருடைய பெண்டுபிள்ளை தவறாமல் தானும்விற்று
அருங்கடனை தான்துளைத்து கருமவிதி வசத்தால்
பறையனுக்கு அடிமையாகி நாற்றமெடுத்த பிணம்
ஊத்தஜாலம் போல்குளிக்கும் நடுச்சுடலை தான்காத்து
படாத பாடும் பட்டு
அருமையுடன் பெற்றெடுத்த பெருமையுள் ளத்தனையும்
அனியாயமாக பாம்பு கனியினால் வந்துதீண்டி
அதையெடுத்து சந்ரமதி பதைபதைத்து சுடலைதன்னில்
அருங்காஸ்டம் தானடுக்கி பெருமையாய் தீவளர்த்து
அழுது புலம்பையிலே பழுதுவந்து நேர்ந்ததென்று
அரிச்சந்திரன் ஓடிவந்து கிரிச்சிவிட காஸ்டமதை
காலா உதைத்துவிட்டு மேலோன் விதிப்படிக்கு
வாய்க்கரிசி கால்பணம் சீக்கிரமாய் தான்கேழ்க
வகையில்லை யென்றுசொல்ல தகைமையுடன் மன்னவனும்
வெளிச்சமாய் உன்கழுத்தில் பளிச்சென்று தாலியது
உள்ளங்கை போலிருக்க கள்ளத்தன மாகநீயும்
இல்லையென்று சொல்லலாமா என்றவனும் - சந்ரமதி
அலரி பிரண்டழுது என்தலைவிதி யோவென்று
அபரஞ்சி தாலியதை நிச்சனவன் தான்பார்க்க
ஆச்சுதே என்றுசொல்லி காச்சிமூச் சென்றலரி
அய்யோ சிவனேஎன்று தைய்யலால் கதிரயிலே
அருமையுள்ள தேவியென்று அறிந்துமே தன்மகனை
விழுந்தழுது அப்போழுது
ஆஆ என்காதலியே ஓஒநான் என்னசெய்வேன்
அருமையுடன் சொற்படிக்கு நடக்கவே வேணுமென்று
அன்பாக சொல்லையிலே தென்பாக சந்ரமதி
அய்யரிடம் போகையிலே குய்யோ முறையோவென்று
காசிமகா ராஜன்பெற்ற காளையை கண்டெடுத்து
கதரி யமுகையிலே பதரியே சேவகர்கள்
கண்டு பிடித்திழுத்து கொண்டுவந்து விட்டார்கள்

காசிமகா ராஜனவன் நேசமுடன் சந்ரமதியை
கடுகனவே கொண்டுவந்து துடிதுடிக்க வெட்டுமென்றார்
தாவி அரிச்சந்திரனிடம் மேவியே சுடலலையிலே
அரிச்சந்திரன் தான்பார்த்து பிரியமுள்ள தேவியென்று
அவர்மனதில் தான்நினைந்து அன்புடன் இருக்கையிலே
ஆஆ என்காதலியே ஓஓயான் என்னசெய்வேன்
அரும்சத்தியம் போகுமடி கருமவிதி வசத்தால்
ஆகையினால் பெண்மயிலே ஓஓயான் வெட்டுகிறேன்
அன்பாய் தலைதனைநீ தென்பாய் குனியுமென்றார்
அப்பொழுது சந்ரமதி தப்பாமல் தலைகுனிய
அரிச்சந்திரன் வாளதனை கிரீச்சிலிட ஓங்கியவர்
அன்புடனே வெட்டயிலே தென்புடனே ஈஸ்பரனார்
அவர்கையை தான்பிடித்து பதராதே என்றுசொல்லி
இன்மாக தானிருத்தி தென்பாக ஏதுசெய்தார்
இவர்மகனைத் தானெழுப்பி தவராமல் பட்டமதை
ஆளும்படி செய்துவிட்டு காளைஏறிச் சென்றுவிட்டார்
இல்லையென்று சொன்னதற்கு இவ்வளவு அவதிபட்டார்
அப்படிபோல் தேவருக்கு அருவருக்கும் அளித்துவிட்டேன்
ஆகையினால் பெண்ணரசே அரநொடியில் போகவிட்டால்
பொய்யனென்று எண்ணியவர் பேசுவார் தேவரெல்லாம்
போகவிடை தாருமென்றார் புத்தியுள்ள மன்மதரும்

ரதிசொல்

மன்மதவேள் சொன்னதொரு வாய்மொழியைத் தான்கேட்டு
வஞ்சிக்கொடி யிடையாள் வணக்கமுடன் நன்றுரைப்பார்
மாயன் மகனாரே என் மைத்துனனே என்கணவா
மன்மத ராஜேந்திரனே வட்ட மதிக்குடையா
மகரக் கொடியோனே மங்கை படையொன்று
வர்ண கிளிபூண்ட மாருதன் தேரோனே
மாயவனார் கண்மணியே வானுலகில் தேவரும்மை

வரவழைத்த காரியமென்ன வந்ததென்ன தூதுவர்கள்
வாய்திரந்து சொல்லுமென்றார் மங்கைரதி அன்னேரம்

மதன்சொல்

தெய்வரம்பை மெச்சுகின்ற தேனே ரதிக்கிளியே
தெவியரே சொல்குரேன்கேள் தேவிந் திரனாரும்
தீரமாய் தூதர்களை க்ஷணத்தில் அனுப்பிவிட்டு
செங்கோல் அரசாண்டு தீரமாக வாருமென்று
ஓலை எழுதிவிட்டார் நான்ஒருநொடியில் போகவேணும்
ஆகையினால் நான்போயி அரைநொடியில் சேதிசொல்லி
ஆரணங்கே வாரனடி நீயழுது புலம்பாதே
அன்னமே அஞ்சுகமே ஆலைவாய் செங்கரும்பே
அமுர்த பசுங்கிளியே அபரஞ்சி தன்னொளியே
ஆசை களஞ்சியமே ஆயிந்த நவமணியே
அந்த அடக்கலான் வால்குருவி அந்தகுரல் எழுப்பி
அனேக காரணதொழிலை அன்பாக பாராட்டி
அகமகிழ்ந்து மெய்சோர்ந்து அளவில்லா காமவெள்ளம்
ஆறாய் பெருகிடவும் ஆசை மயில்பூண்டு
என்னை அணைந்து சுகம்பாராட்டி அனுப்புமடி
தேவியரே என் அன்ன ரதிக்கிளியே

ரதிசொல்

சாரங்க பாணிபெற்ற ஒய்யார மேனியாரே
சரசசம் மாரலீலா வதனகெம் பீரலோலா
சாமிநீ என்துரையே பூமியில் என்னைவிட்டு
சமராபுரி போரேனென்று அமரர்குறை தீர்போனென்று
சதிக்காக உந்தனைநான் யிதுகாலம் நம்பிருந்தேன்
சதிசெய்து நீர்போனால்நாதன் ரதியள் ளனைந்திடுவேன்
சதுர்புஜனே என்கணவாநீர் போகவேண்டா மென்று
சாதித் துரைத்திட்டேன் நீதியுள்ள என்துரையே

மதன்சொல்

மானே மரகதமே தேனே மடமயிலே
மையல் விழியாலே சையோக மானபெண்ணே
மலர்ந்த செந்தாமரையே முல்லைமான முள்ளவளே
மலைநாட்டு செந்தேனே முலைநாட்டு விழியாளே
மஸ்தகமே என்னுடைய புஸ்தகமே சொல்வதைகேள்
மணவாளன் சொல்வதைகேள் மனையாட்டி ஒருசேதி
மகாதேவர் வையகத்தில் அய்யோ தவமிருக்க
மலர்கணையே நான்தொடுத்து திருவும்பல தவமழித்து
மங்களமாய் வாரேனடி சிங்காரப் பெண்ரதியே

ரதிசொல்

செங்கண்மால் பெற்றெடுத்த பொங்குமுள்ள அங்குஜனே
செப்புவதை கேளுமேநீர் ஒருதப்பிதந் நேராது
ஜெகமுழுதும் மானிடர்கள் அகமகிழ்ந்து அரைநேரம்
கனிநடந்து தானிருக்க பரமனருளை அறியாமல்
சேதிவந்த தென்றுசொல்லி வாதிப்பது நீதியல்ல
ஜலடமது கடைதேர யிடம்பொருளே வல்லவகை
சாஸ்திரங்கள் பாராமல் நாஸ்திகர் போலென்னாதே
சதகோடி ராஷ்டிதறு மதமான வானவரும்
சண்டையிலே மாண்டதென்று மண்டையேறிபோர் மொழியை
சற்றுமே என்தகப்பன் பக்தியாய் செய்தவகை
சாடுவே னென்றுசொன்னீர் நாடுநகரஞ் சிறக்க
சாய்வாய் போய்விடுவீர் பாம்புகணை மன்மதரே
ஜெகமெச்ச வாழ்வோமென்றாள் இன்பமுள்ள பெண்ரதியும்

மதன்சொல்

அண்டகை லாசமதில் அங்குள்ளமகா யீஸ்பரனார்
அன்பாய் விரதமுடன் அண்டகிரியை விட்டு
அன்றாட வேள்வியில் அருந்தபசு தான்புரிய

அண்டமுடி தேவர்களும் அங்குள்ள தபோதனரும்
அண்டதிசை பாலகரும் சங்கீத வாத்தியமும்
அண்டவிட மில்லாமல் அண்டசப்த சாகரரும்
அண்டரச யிந்திரரும் அன்பான மண்டபத்தில்
அண்டம் கலங்கிவிட அஞ்சி திடுக்கிட்டு
ஆயிரங்கண் யிந்திரனார் அங்கே முடிசோர்ந்து
பாராமலே கேழ்க்க ஆகாது மாகாது
அண்டம் மன்மதரும் அவனாலே யாகுமென்று
அனைவோரும் சொல்லையிலே அதுகேட்டு தேவர்களும்
அண்டம் கணக்கெழுதும் அங்குள்ள சித்ராபுத்தரனை
அன்பாய் வரவழைத்து அன்பாய் ஆரோக்யாபுரம்
ஆனாலும் மன்மதரை விடுதிவரச் சொல்லி
பனஓலையை கொண்டு அதிசீக்கிரமாய் தானெழுதி
ஆணுமுத்திரை போட்டு அங்குள்ள துர்கையில்
அனுப்பினார் தேவரெல்லாம் அன்பாகஎன் முன்னேவந்து
சங்கதியைச் சொன்னார்கள்
ஆகையினால் பெண்ணரசே அனுப்பிவையும் எந்தனையும்

ரதிசொல்

நால்வேத சாஸ்திரமும் நவநீத தத்துவமும்
நற்பாவ புண்ணியமுடன் நண்பராக தானறிந்து
நாளைவரும் காரியங்கள் நமக்குத் தெரியாது
நாடோடி பாவனைபோல் நாம்போவ தெல்லாம்
நமக்குநலமுள்ள காலமட்டும் நாடோர்க்கும் தானவர்க்கும்
நலந்தப்பி நின்றுவிட்டார் நாட்டார் ஒருவரும்தான்
நாயகரே சொல்குறேன்கேள் மாறுமரு விருந்து
மண்டலத்து சந்திரன்போல் மணமுடிக்கும் புஞ்சரமே
மகராஜன் மெச்சுமொரு மருவுமறிக் கொழுந்தே
மந்தார பூமலரே மல்லிகைப் பூச்செண்டே
மதன கஸ்தூரியே வானோர்கள் பூவினுள்ள

மாணிக்க கற்பகமே என்னைமாலையிட்டு கைபிடித்த
மணவாளா என்றுசொல்லி என்மாமனார் உன்தகப்பனவர்
வலுமையினால் யிந்தமொழி மகாவீரியமாய் தானுரைதீர்
மகாதேவர் முன்பாக மனுமுதலார் நில்லார்கள்
மகாவீர்யமாய் சொல்லிவந்த மகரமுடி தேவர்களும்
மகாபதி தேவேந்திரனும் மகாமுனி தபோதனரும்
மாயன்மேல் வீரியத்தை மனதிலே தானினைந்து
மணவாளா போரேனென்று மகிட்சியாய் சொல்லவந்தீர்
மகாதேவர் தன்கோபம் மரிப்பாரோ யாருமில்லை
மயக்கம்வந்து நேர்ந்துவிடும் மனையாளின் தன்வாக்கு
மருவார்த்தை சொல்லாதே மாளிகையில் நீயிருந்தால்
மங்கை யருகிலிருப்பேன் மன்மத சிங்காரமுடன்
மணவாளரே நீயும் மறுப்பது நீதியல்ல

மதன்சொல்

கண்மணி சிரோன்மணியே பொன்மணி மனோன்மணியே
கருத்தி லிசைந்தமட்டும் விருத்திக்கு சொல்வனடி
கட்டழகர் யிந்திரரும் கனமான நாரதரும்
கமலமதில் வந்துதித்த கருத்துள்ள பிர்மாவும்
கனகயோ சனைசெய்து கடுவெனவே தூதனுப்பி
காரியமாய் தானழைக்க கருத்தில் உதித்துமந்த
கன்னிரதி தேன்மொழியே காம பசுங்கிளியே
கனத்த சந்தோஷமுடன் கட்டழகா போகுமென்று
கன்னி விடைகொடுத்தாள் கனமுடனே தேரேரி
கரும்புவில் தானெடுத்து சிறிசிகன்னி படையுடனே
கடுகெனவே தான்பார்த்து கட்டழகர் யிந்திரரை
கண்டுமிக வார்த்தைசொல்லி (அங்கே) காரியங்க லுண்டானால்
கடுகெனவே தான்பார்த்து கட்டழகி வாரானடி
கண்மணி மெத்தையின்மேல் கலந்துமிக லீலைசெய்து
கன்னியரே நாமிருப்போம் கலங்காதே என்றுசொன்னார்
கருத்தாக தானுரைத்தார் கன்னிரதி யாளுடனே

ரதிசொல்

புண்ணியரும் சொன்னதொரு புதுமைகலைத் தான்கேட்டு
புத்தியுள்ள என்கணவா பிரியமுள்ள மைத்துனரே
புருஷவஜீகறமே பிரகாஷ முள்ளவரே பிரபல்லிய கெம்பீரா
புஷ்ப கணைஎடுத்து புருஷ சிகாமணியே
பூலோக சந்திரனே பூங்கிளி தேரேறி
புஷ்ப கணைஎடுத்து நீபோவது தர்மமல்ல
புண்ணியரே என்சுவாமி பொன்னுலகில் நீபோனால்
பிழைமோசம் வந்துவிடும் யிந்தபெண்ணால் சொல்கேட்டு - நீர்
போகவேண்டாம் என்சுவாமி பிரியமுடன் தானுரைத்தார்
அந்த பேரான பெண்ரதியும்

மதன்சொல்

பெண்ணேநீ என்துடையில் பூசிய சந்தனமே
பூவின் மலர்கொடியே பூந்தாரும் வீசுகின்ற
அடிபுத்தியுள்ள பெண்ணரசே பூமன் திருமகளே
பொங்கும் மதிலுளியே.......
புருஷ வசீகரமே பூந்தாமரை யிதழே
பகருவேன் னொருவசனம் பூமுடித்த தேவரெல்லாம்
போற்றி எனையழைத்தார் போசவேணும் எந்தனுக்கு
பிரியமுடன் யிப்பொழுது பூங்கிளியே மாங்குயிலே
பொற்கிசைந்த நற்கிளியே புனுகுஜவ் வாதொளியே
பூக்கும் மலர்கொழுந்தே புத்தியுள்ள என்ரதியே
பேசுங் கிளிரசமே பேடை நடைஅன்னமே
பெண்கள் தன்னில் சுந்தரியே பெண்ணேநீ கேளுமென்றார்
போக விடைகொடடி புத்தியுள்ள பெண்மயிலே

ரதிசொல்

மாயவனார் யீன்ரெடுத்த மாலை மணிவிளக்கே
மங்கைபெற்ற ரத்தினமே மன்மத ராஜேந்திரனே

வட்ட மதிக்குடையா வானத்து அம்புலியே
மகர கொடியோனே மங்கை படையோனே
வர்ண கிளிபூண்ட மாருதன் தேரோனே
வசந்த ஒய்யாரமுள்ள மாயவனார் கண்மணியே
மாணிக்க கண்ணொளியே மதமிகுந்த புஸ்தகமே
வானுலகில் தேவரும்மை வரவழைத்த காரியமென்ன
வந்ததென்ன தூதுவர்கள் வகையாக யிப்பொழுது
வாய்திறந்து சொல்லுமென்றாள் மங்கைரதி தேவியரும்

மதன்சொல்

மாங்குயிலே குயிலே பூங்கொடியே மயிலே
மாதுரதியே ஒயிலே வாதுசெய்யாதே தையலே
மய்யர்கதி பதியே புவிதைய்யலர்க்கு நாயகமே
மாமோக சுந்திரமே மாமோக ரஞ்சிதமே
மாணிக்கமே தனமே ஆனிப்பொன்னே கனமே
மதிவதன ரூபமே அதிரூப சித்ரழகி
மச்சமில்லா வுச்சிதமே யிச்சையுள்ள நிச்சயமே
மங்கையர்கள் கங்கனமே நங்கையர்கள் வங்கனமே
மனமே மலர்சரமே மனமேதரும் வரமே
மங்கள சிகாமணியே எங்குஞ் சிரோன்மணியே
மனமுருகி யிந்திரனார் கனமுடனே தானழைக்க
மதிமயங்கி யுந்தனைநான் சதியென்று நம்பியிருந்தால்
மதிப்பாரோ பூவுலகில் தப்பிப்பாரோ தேவரெல்லாம்
மனுநீதியுந் தெரிந்து தனுர்வேதமும் உணர்ந்து
மாதே யெனையனுப்ப வாதுஎன்ன யிப்போது
மங்காதே நாகரத்னம் சிங்கார மாளிகையில்
மாணிக்க வஜ்ரநிலை ஆனிப்பொன் னாலிழைத்த
மகாஉச்சித மெத்தையின்மேல் ஜெகமெங்கும் மணக்கும்
மல்லிகை முல்லைமலரால் உல்லாசமாய் பரப்பி
மத்தாப்பு சாலுவை விஸ்தாரமாய் விரித்து

மருவும் பன்னீர்புனுகும் சிறுகஅதன் மேல்தெளித்து
மகிழ்ச்சியுடன் யிருந்தால் மகாதேவர் தபசழிக்க
தீதேது மில்லாமல் மகிழ்ந்துமே வாரேனடி
மங்களமாய் யிப்பொழுது
போக விடைகொடடி புத்தியுள்ள பெண்ரதியே

ரதிசொல்

ஆதிமுன் நாளையிலே நீதியுடனே நடந்து
அதிசிய மானகதை விதிக்குறேன் நீயுமதை
அன்புடனே கேளுமென்றார் யுண்பரதி யெடுத்துரைப்ப
அய்யோத்தி நாடாண்ட பொய்யா அரிச்சந்திரன்
அரும்விஸ்வா மித்திரற்க பெருங்கடன் பட்டதினால்
அய்யோத்தி நாட்டைகொடுத்தும் துய்யகடன் தீராமல்
அவர்மனைவி சந்ரமதி தவபாலன் லோகிதன்னை
அழைத்துக்கொண்டு காசிஎன்று தழைத்தபட்டணம் பேகி
அவர்கள்யிரு பேர்களையும் கவனமுடன் விலைகூறி
அந்தணர்க்கு ஆளாக்கி நந்தனிடத்தில் சென்று
அருமை தொழில்புரிந்து கடனை கொடுத்துவிட்டீர்
அவர்சந்ர மதிமகனும் சிந்தைநொந்து அவர்பின்னால்
அடுத்துசந்த பாவனைபோல் அடியாளும் வாரேனென்று
பிடிவாதமாய் ரதியும்

மதன்சொல்

ஒன்பது வாய்கூட்டம் உறுதியென்று லோகமெங்கும்
நம்பி இருக்குமடி நாகரத்ன பெண்மயிலே
அவரவர் செய்தவினை அவரவர் அனுபவிப்பார்
ஆரணங்கே பெண்மயிலே செய்தவினை போறதில்லை
திருவிளக்கின் சாட்சியாய் விளக்குகிறேன் தேன்மொழியே
செப்புகிறேன் தேன்ரதியே ஆராரிந் தென்னை
ஆனைகட்டி வாழ்ந்ததென்ன மாளாத வானவர்கள்
வகைமோசம் செய்துவிட்டார்..........

நேராத பிர்மலபி (நமக்கு) தேராத செல்வமெல்லாம்
ஆசையிட்ட பாவினைபோல் தேம்பி தவிக்காதே
எண்ணமெல்லாம் பொய்யடிதானே......
அங்கத்தின் வாழ்கையது அதுநமக்கு பொய்யடிதான்
உப்பு யுருந்தபாண்டம் உபயமில்லா நெஞ்சமடி
நீரின்மேல் குமிழியடி நீச்சமந்த வாழ்வடி
ஒட்டுச் சுவரடிதான் ஓயாக் கவலையிது
கரத்திலடித்த காயமடி காமசண்டாளன் பொந்தியடி
புளியம்பழத் தோளடிதான் தோகைரதி பெண்ணரசே

ரதிசொல் - தேசிங்குராஜன்கதை

அல்லவே என்கணவா ஆணழகா சொல்குறேன்கேள்
ஆதியில் நடந்தகதை நீதியாக கேளுமென்றார்
அன்பாக செஞ்சிநகர் தென்பாக ஆண்டிருந்த
அரண்தே ரணிராஜன் அவன்தம்பி தரணிசிங்கு
நவாபு பகுதிதன்னை நலமுடனே கட்டிகொண்டு
நற்புரவி என்றதுவும் சொர்கலோகத் திலிருந்து
நாடியே டில்லிபாஷா தேடியதை கொண்டுவந்து
குதிரை லாயந்தன்னில் பக்குவமாக கட்டி
அந்தசமயந் தன்னில் இருந்த தேசிங்குராஜன்
அவனுடைய தோழனான அருமைமொவுத்து காரன்
அதிசீக்கிரமாய் வழைத்து பதியான செஞ்சிவிட்டு
அய்யாவே டில்லிபாஷா மெய்யாக நீர்கேளும்
அரும்புரவி யேருதற்கு பெறுஞ்சக்தி இல்லாமல்
அன்பான என்தந்தை அருஞ்சிறையில் தானிருக்க
அதைக்கேட்டு பாலன்யான் இன்பமுடன் ஓடிவந்தேன்
அரும்புரவி எங்கேகாட்டும் பெறுமையுடன் சவாரிசெய்து
அன்புடனே தந்தைதன்னை தென்புடனே மீட்டுகிறேன்
அருமையுடனே யுரைக்க பெறுமையுடன் டில்லிபாஷா
அந்த புரவிதன்னை விந்தையுடனே காட்ட

அதைபார்த்த பாலகனும் பதைபதைத்து குதிரைதன்னை
அதட்டியே தானேறி பதட்டமுடன் சவாரிசெய்து
அப்படியே பாஷாவிடம் கொண்டுவந்து தானிருத்தி
அப்பொழுது பாஷாவும் அன்புடனே தான்மகிழ்ந்து
அவருடைய தன்மகளை அன்பாய் விவாகம்செய்து
அவனேரும் புரவிதன்னை அன்புடனே தான்கொடுத்து
அவனுடைய தந்தைபின்னால் அனுப்பினார் செஞ்சிநகர்
அனையோரும் தான்கூடி கனமான செஞ்சிசேர்ந்து
ஆண்டிருக்கும் நாளையிலே வேண்டியே நீகேளுமையா
ஆற்காடு தனையாளும் தீர்க்கமுள்ள நவாபு
அனுப்பினார் தோன்றமல்லனை அருஞ்செஞ்சி பகுதிக்காக
அந்தக்கேட்டு தோன்றமல்லன் பதைப்புடனே உள்ளேபோனான்
மல்லனை பார்த்தஉடன் காளையந்த தேசிங்கு
அதிககோபம் தானாகி பதைபதைத்து ஏதுசொல்வார்
ஆரடா தோன்றமல்லன் கூறடாஉன் சமாச்சாரம்
அருமையாய் என்சீமையிலே பெருமையாய் நகாறுபோட
என்னவலுமை கொண்டாய் எனக்கரிய சொல்லுமென்றார்
என்னெதிரில் நின்றேயானால் இருதுண் டாக்கிடுவேண்
பணமேது காசுமேது பதுலும் பேசாதே
பரபரப்பாய் செஞ்சிவிட்டு சரசரவென்று ரோடிவந்து
பார்த்தான் நவாப்பவனை வேர்த்தான் முகமதுவும்
பணமெங்கே என்றுகேட்டார் கணமான மல்லனையும்
பணங்கானேன் காசுகாணேன் மனமும் நடுங்குதையா
பார்த்தீபன் தேசிங்கு தீர்கமுடன் என்னசொன்னான்
பணமில்லை காசுமில்லை துனதுனவென்று பேசாதே
பாங்குடன் நவாப்பவனை இங்கே வரச்சொல்லுமென்றார்
பயந்து தான்வந்தேனென்று பயந்துமே தானுரைத்தார்
பார்த்து நவாப்பவனும் பாளையத்தை சேர்த்துவிட்டான்.
பதரான செஞ்சிக்கு பாங்குடனே பயணமானான்.
தேவனூர் பேட்டையிலே போட்டா நகாறுதன்னை

திடுக்கிட்டு தரணிசிங்கு சடுக்கென்று ஓடிவர
பாளையத்தை யதம்செய்ய காளைநாங்கள் போறேனென்று
பார்த்தந்த பத்தினியும் வேர்த்த முகம்தானாகி
பத்தாவே உன்முகத்தை சுத்தமாய் நான்பார்க்கவில்லை
பாளையத்தில் சண்டைசெய்ய காளைநீயும் போகவேண்டாம்
என்னறுமை பத்தினியாள் உத்தமிசொல் கேளாமால்
பரபரப்பாய் நவாப்பின்மேல் சரசரவென்று சண்டைசெய்ய
பாங்குடனே ஓடிவந்து காளை ஏறுமாய்
பாலாவை நவாப்பு தன்னை சதிராக தேடிவந்து
பாராதவன் காணமல் கீர்த்தியது கிடைக்காமல்
பட்சமுள்ள தோழனையும் நிட்சயமாய் தான் தோர்ந்து
பதைத்து மனங்கொள்ளாமல் குதித்துமே தான்சென்றார்
பத்தினி சொல்கேளாதினால் பழுதுவந்து நேர்ந்ததுகாண்
அப்படிபோல் எந்தன் சொல்லை ஒப்பு கேளாவிட்டால்
ஆபத்து நேர்ந்துவிடும் ஆகாது என்கணவா.
அடியாள் அலைந்திடுவேன் ஆறுமில்லை எந்தனுக்கு
போகாதே என்று சொன்னாள் புத்தியுள்ள பெண்ரதியும்

மதன்சொல்

சங்கரனார் திங்களணி தங்கையணி மங்கைபாகன்
சாம்பசிவனார் எடுத்தார் தேம்பழகான எந்தன்
சரச ரதியாளே கேள்தசவசன பெண்ரதியே
சய்யோக ரஞ்சிதமே ஒய்யாரமான கண்ணே
ஜகத்தில் மாதர்களிசைந்த சுகந்தறும் செந்தேனே
ஜாதியில்உயர்ந்த மல்லிகையே ஜோதிமயமான கண்ணே
சல்லாப ரதியாளே சொல்மொழியை கேளாயே
சராசர மயமானோர் பராபர வஸ்துவானோர்.
சண்முகனை யீன்றயீசன் விட்ட அனல்தணிந்து
கடினமதில் வாரேனடி மயங்காதே பெண்ணரசே
போகவிடை கொடடி புத்தியுள்ள பெண்ரதியே

ரதிசொல் - மார்கண்டன் கதை

அல்லவே என்கணவா ஆணழகா சொல்குறேன்கேள்
ஆதியில் மார்கண்டனுக்கு ஆண்டவர் வரங்கொடுக்க
அந்த வரத்தைப்பெற்று விந்தையுடன் தானினுக்க
அந்தகணம் வீந்தவரம் ஆச்சுதே என்றுஎண்ணி
ஆளைவிட்டு தானழைத்தான் அக்குனியாய் தானெரித்தார்
அங்கிருந்த தூதுவர்கள் பங்கமடய ஓடிவந்து
அய்யனே என்னசெய்வோம் மெய்யனே கேளுமைய்யா
அக்கினி எங்களுக்கு நிற்கமுடி போகவில்லை
அன்பாக தானுரைக்க தென்பாக எமனவன்
ஆச்சர்யப் பட்டுஎமன் பாசக் கயிரெடுத்து
ஆங்கார கோபமுடன் பாங்காய் கிடாவிலேரி
அதிவேக மாய்நடந்து சதிராக கிட்டவந்து
அரன்மார் கண்டன்மீது பாசக்கயிர் போட்டமுக்க
அப்போது என்தகப்பன் ஆங்கார கோபமுடன்
அன்றுவந்து எமனை மண்ணுளவே விதைத்தார்
அப்பேர்க்கொத்த பலமுள்ள என்தகப்பன் யீஸ்பரனார்
தவராமல் போரேனென்றீர்
ஆகாது என்கணவா அபகேடு வந்துவிடும்
அன்பாக தானுரைத்தாள் அன்னரதி தேவியரும்

மதன்சொல் - பத்மாசூரன்கதை

அல்லடி பெண்ணரசே ஆரணங்கே சொல்கிறேன்கேள்
ஆதியில் உன்தகப்பன் ஆண்டகதை சொல்கிறேன்கேள்
அதிவீர பத்மாசூரன் செய்தானடி அருந்தபசு
அந்த பசுமெச்சி உன்தகப்பன்
என்னவரம் வேணுமென்று யின்பமுடன் கேழ்க்கையிலே
அப்பொழுது பத்மாசூரன் அவரையும் தொண்டநிட்டு
ஆர்தலையில் கைவைத்தாலும் அவரெரிய வேணுமென்று
அன்பாக கேழ்க்கையிலே தென்பாக கொடுத்துவிட்டார்

அதையறிய வேணுமென்று அவர்தலைமேல் கைவைக்கப்போய்
அஞ்சி பயந்தோடியவர் அவ்வேளங் காயிலொளிந்தார்
அப்பொழுது என்தகப்பன் ஜெகஜால மோகினியாய்
அவனெதிரில் வந்துநிற்க அவளழகு தான்பார்த்து
அனையவரும் அப்பொழுது அன்புடனே ஏதுசொல்வார்
ஆற்றிலே முழுகிவந்தால் ஆகுமென்று தானுரைத்தார்
ஆற்றிலே போய்பார்த்தால் அணுவளவும் ஜலமில்லை
அங்கிருந் தோடிவந்து ஆட்டுக்குத்தண்ணீர் இல்லையென்றான்
அருநீர் இருந்தாலும் அள்ளிசிரசில் வைத்தால்
ஆகுமென்று தானுரைத்தார்
ஆட்டுக் குளம்புதன்னில் அருநீரை யுண்டுபண்ணார்
அதையள்ளி பத்மாசூரன் அவன்சிரசில் வைத்தவுடன்
அக்கினிப் பிரகாசமாகி அக்கினியாய் எரிந்துவிட்டார்
ஓய்அத்தானே வாருமென்றார் உன்தகப்பனை தானழைத்தார்
அப்பேற்கொற்ற பலமுள்ள ஆதிவிஷ்ணு என்தகப்பன்
அவர்வயிற்றில் நான்பிறந்து அண்டர்குறை தீர்க்காக்கால்
ஆர்போய்தான் தீர்பாரடி அன்பாக தானுரைத்தாள்
ஆயன்மகன் மன்மதரும்

ரதிசொல்

அப்போது ரதிதேவி ஆரணங்கு ஏதுசொல்வாள்
மயிலும் குயிலும்அவள் மருவியொரு நாதனைப்போல்
மாமன் மகனாரே மைத்துனரே என்கணவா
மனையாட்டி இங்கிருக்க மணமகிழ்ந்து தேவர்சபை
போரேனென்று நீயுரைத்தீர் பொற்கொடியாள் மனம்நோக
மதிமோசம் வந்துவிடும்......
மாயவனார் கண்மணியே மங்கை சிகாமணியே
மண்ணுள்ள காலமட்டும் மனமகிழ்ந்து இருபேரும்
வாழலா மென்றிருந்தேன் மாமாநீ என்முன்னே
வந்துஅனு போகமென்ன....

மாலை சுருங்குமுன்னே மல்லிகைப்பூ வாடுமுன்னே
வாசமுள்ள செண்பகப்பூ மருவிமிக வாடுமுன்னே
மங்கையர்கள் தன்னுடனே வாதாடி பொய்கைதன்னில்
மஞ்சள்நீர் குளித்து மனமகிழ்ந்து நீரெடுத்து
எந்தன் முகம்பார்த்து வானவ ராஜேந்திரனே
மருவார்த்தை நீர்சொன்னால் மனமுனக்கு வந்ததோ
மதியுள்ள என்கணவாயிது.....
மாயனார் கட்டளையோ மகாதேவர் சொல்படியோ
மார்மீதில் தொட்டில்கட்டி மடிமீது நடைபழகி
என்னைபெற்ற பார்வதியாள் மாபாவி சாபமுண்டோ
மத்துவெண்ணை பால்திருடி மத்தால் அடிபட்டு
மதிமிகுந்த கிருஷ்ணனிடம் மனம்நொந்த சாபமுண்டோ
மண்டல விண்டல பதியாளும் வரிசை கணக்கெழுதும்
மாபாவி சித்ராபுத்ரன் வஞ்சனையாய் தலையில்
வரம்எழுதி வைத்தானோ இந்தமாய விதிக்கு
மாபாவி யான்பிறந்தேன் மண்டலத்தில் யான்பிறந்தேன்
மதியுள்ள என்கணவா
என்றுமே தானுரைத்தாள் இன்பமுள்ள பெண்ரதியும்

மதன்சொல்

அப்பொழுது மன்மதரும் அக்ஷணமே ஏதுசொல்வார்
சாம்பசிவ னாரும் தபசில் இருப்பதனால்
தசகோடி தேவர்களும் சடாமுனி பாலகரும்
தரணாளும் யிந்திரரும் சங்கதியை தானுரைக்க
ஜடைமுடி தான்தரித்த சதாசிவனார் தன்தபசை
தைரியமாய் தானழிக்க ஆராலும் ஆகாது
தனமிகுந்த மன்மதரை சர்குறு வார்த்தையினால்
தானழித்து வந்தால் தன்னாலே யாகுமென்று
தங்கமுடி தரித்தார் தர்மதே வேந்திரர்முன்
ஆகையினால் பெண்ணரசே நான்தங்க முடியாது

தங்கி விட்டேனாகில் சகலமுடி தேவர்களும்
சபைகோழி என்பார்கள் சங்கையில்ல கண்மணியே
சகலகலை நீதெரிந்து.......
தடங்கல் நீ சொல்லாதே தர்மமோ உந்தனுக்கு
தர்மமோ உந்தனுக்கு தவமிகுந்த பார்வதியாள்
தான்பெற்ற சேழியையே தயவாய் யனுப்பிவையும்
தங்கமயில் பெண்ணரசே தடுக்காதே யிப்பொழுது
போக விடைதாரும் புத்தியுள் பெண்ரதியே

ரதிசொல்

அந்தநேரம் ரதிக்கிளியும் அன்பாக ஏதுசொல்வார்
மானத்து மீனோநீ மகரக் கொடியோனே
மனமுடிக்கும் செண்பகமே மன்மத ராஜேந்திரனே
மன்னர்முடி மேலிருக்க மந்தார் பூமலரே
மருவே மருக்கொழுந்தே மல்லிகை பூஞ்சரமே
வானோர்கள் பூவிலுள்ள மருவான கற்பகமே
மாலையிட்டு கைபிடித்த மணவாளா என்புருஷா
மாபாவி யானதொரு மகாதேவர் புத்திரியாள்
மனம்நொந்து இங்கிருக்க மாயன் மகளாரே
மைத்துனரே என்கணவா மனந்துணிந்து போரேனென்றீர் - என்
வாய்மொழியைக் கேட்டு போகாதீர் யிப்பொழுது
பிழைமோசம் வந்துவிடும் புத்தியுள்ள என்கணவா

மதன்சொல்

அல்லடி பெண்ணரசே ஆரணங்கு சொல்கிறேன்கேள்
அமரரிடம் நான்போனால் அனர்தம்வந்து நேருமென்று
அன்பாய் எனைதடுக்க ஆகாது உந்தனுக்கு
ஆடும் மயிலேநீ அபரஞ்சி உன்னிதமே
ஆனிப்பொன் செண்பகமே ஆசை களஞ்சியமே
ஆயிந்த நவமணியே அடக்கலான் வால்குறுவி
அந்தகாரணத் தொழிலாலே அன்பாய் பாராட்டி

அகமகிழ்ந்து மெய்சோர்ந்து அளவில்லா காமவெள்ளம்
ஆறாய் பெருகிடவும் ஆசை மயில்பூண்டு
அனைந்துசுகம் பாராட்டி அனுப்புமென்று தானுரைத்தார்
அன்புடனே மன்மதரும்

ரதிசொல் - ராமன்கதை

ஆனாலும் என்புருஷா அருமையறிந்த தொரு
ஆண்குயிலே சொல்கிறேன்கேள் அம்மாமி சீதையரை
அரக்கனவன் ராவணனும் அபகேடு தான்நினைந்து
அருஞ்சிறையில் வைத்ததினால் அவன்தம்பி யானதொரு
அன்புள்ள விபீஷணரும் அண்ணன்முகம் தானோக்கி
அடைவாக தானுரைப்பார் அண்ணாவே ஆணரசே
அருஉயிரை கொண்டுவந்து அருஞ்சிறையில் நீவைத்தாய்
ஆகாது உந்தனுக்கு அந்தஅனையோரும் வாழ்ந்திருப்போம்
ஆகமனு நீதியுடன் ஆண்டுகொண் டிருக்கலாம்
ஆங்கார வலிமையுடன் அருவுயிரைக் கொண்டுவந்து
அவமானம் பண்ணுரது ஆகாது அண்ணாவே
அவனை எதிர்த்துமே ஆண்மையுடன் மாண்டதுபோல்
அவன்மடிந்த பாவனைபோல் அமரரிடம் போரோனென்று
ஆண்மையுடன் தானுரைத்தீர் ஆபத்து வந்துவிடும்
அழகு சிகாமணியே அடியாளுக் கென்னவழி
ஆதரவு சொல்லுமென்று அன்பாக கேழ்க்கலுற்றாள்

மதன்சொல்

மங்கள மிகுந்தனளே அடிநங்கையரே நீகேளும்
சங்கை யொன்றும் வாரதில்லை செங்கமல தாதியுடன்
யிங்கித பூங்காவனத்தில் சங்குபம்பை தான்முழங்க
பந்துவிளை யாடிஅடி பைங்கிளியே நீயிருந்தாள்
பாலமணி சுந்திரமே அடிநீலவிழி மாதரசே
மேல்புருவ மானவளே பூஞ்சோலைக் குயில்மொழியே
உன்தந்தையுடன் சமர்த்தை எந்தனிடம் சொல்லவந்தாள்

உந்தன்பிதா சமத்தை சிந்தைமகிழ்ந்து கேளும்
அந்தவை ராக்கியத்தை உந்தன்பாண்டி ராஜன்
செந்தமாதாய் காட்டயிலே அந்தகிழ வாணிச்சிக்கு
அன்றுவிற்ற பிட்டுக்கு குன்றுமண் சுமந்தவண்டி
மண்டலத் தான்கையில் பரம்பாலடி பட்டவண்டி
கண்ணப்பன் னெச்சிலை இன்பமாய் யுண்ணவண்டி
மற்றொரு வேடன்கையில் மொத்தஅடி பட்டவண்டி
வெந்த பிணத்தையெல்லாம் இன்பம்வைத்து வுண்ணவண்டி
பிள்ளைக் கரியதனை அள்ளிவைக்க சொன்னவன்டி
பிச்சையேற்ற அன்னமதை இச்சைகொண்டு வண்ணவண்டி
வள்ளாலன் தன்மனையில் பிள்ளையுரு வானவண்டி
வாதுகொண்ட யீஸ்பரிமுன் கால்நடனம் செய்தவண்டி
பத்மா சூரனுக்காய் பயந்து திரிந்தவன்டி
பத்தினிமார் தனையழிக்க பிச்சாண்டி யானவண்டி
அன்று விஜயன்கையில் நீரடி பட்டவண்டி
ஆனையை யுரித்தவண்டி மானைதரித்தவண்டி
மாமயில் லோர்காக கடல்மழை எடுத்தவண்டி
ஜடையை விரித்தவண்டி சுடல்சாம்ப லணிந்தவண்டி
சங்கரன் தன்சிரசில் கங்கையை அமந்தவண்டி
இங்கித ஓடெடுத்து இரந்தமுகம் யுண்ணவண்டி
அந்தசமயத்தில் எந்தனிட தந்தையோடி
அந்தசிரை தான்மீட்டார் அவருடைய தன்சமர்த்தை
அதிகமாய் சொல்லவந்தாய் அன்னரதி என்னுடனே

ரதிசொல்-கிஷ்டர் கதை

எம்பெருமான் யீன்றெடுத்து எங்கலைந்து மலர்வாலிபனே
என்குலத்தை சின்னமென்றீர் என்கணவா என்புருஷா
என்மனதிற் கிசைந்த என்மாமாநீ யிப்பொழுது
உன்குலத்தை சொல்லுகின்றோர் உத்தமுள்ளஎன்கணவா
யிரவில் பதிமார்கள் உரலோடு கட்டிவைத்து

இடைச்சி சிறுமத்தால் அவளடிச்ச அடியுபட்டு
எடுத்து கோவர்த்தனகிரியை பிடித்தார் குடையாக
இரண்ணியாக் கதனுக்கு பயந்துநடுக் கடலில்போய்ஒளிந்தார்
ஏறுமந்த அர்ஜுனன்தேர் சாரதியாய் நின்றார்காண்
இடையர் வம்சத்தில்பிறந்த இன்பமுள்ள என்கணவா
இந்திர லோகம்போனால் தந்திர வித்தைசெய்வார்
போகாதீர் போகாதீர் புத்தியுள்ள என்கணவா
பெண்ணால் சொல்கேட்டு போகவேண்டாம் யிப்பொழுது
போனீரே யாகில் பிழைமோசம் வந்துவிடும்
போகாதே என்றுரைத்தார் பூவைரதி தேவியரும்

மதன்சொல்

யீரேழ் லோகத்தை எல்லாம்ஒரு குடைகீழ்
இருந்து அரசாண்டு இரண்யாயநமா வெனவே
அல்லவர்க்கும் சொல்லவைத்து யீடொருவர் யில்லாமல்
இருமாந் திருக்கையிலே யிரண்யப் பிரகலாதனென்று
இளம்பிள்ளையும் பிறந்து யிதோஹரி நமவெனவே
இதுவே மொழியுரைக்க இருமாந்து இரண்ணியற்கு
இடிபோல கோபம்வந்து எங்கடா ஹரியென்று
எழுந்தவறும் கம்பத்தை யுதைக்ககம்பம் பிளந்து
யேகசிங்க ரூபமதாய் யெட்டுதிக்கும் கலங்க
இரண்ணியனை தான்வாரி எடுத்தவனை கீழ்போட்டு
இலகுமார்பை பிளந்து இருந்தகுட லத்தனையும்
இருகையில் வாரிஉயிர் எடுக்கும்படி செய்த
என்தகப்பன் ஹரிமாயன் எம்பெருமாள் தானிருக்க
எனக்குபயம் மில்லையடி யிடரொன்றும் வாராது
இருதயங் கலங்காமல் யேகும்படி சிலவு
எனக்குக் கொடுத்தனுப்பவும்

ரதிசொல்

அப்போது ரதிதேவி ஆரணங்கு ஏதுசொல்வாள்
யின்னும் ஒருசேதி சொல்லுகிறேன் கேளுமையா - நான்
தூங்குகிற வேளையிலே துய்யகினா காண்டேனென்றாள் - நீர்
அரப்புத் தலையிட்டு அலைமோதி தலைமுழுகி - நீர்
முழுகி தலையாத்தி முன்முடிந்து பின்போட்டு - நீர்
வீட்டில் வருகையிலே விகாரமாய் வந்தீர்காண்
மருபடியும் ஓர்நாள் மங்களமாய் கண்டேனென்றாள்
வேதியர்கள் வந்திருவரும் ஓமம் வளர்த்தினார்கள்
ஓமம் வளர்த்திஇருவருக்கும் உத்தரித்தார் மாங்கல்யம்
நான்அலண்டு எழுந்திருந்து என்அங்கம் தடுமாறி
மெத்த விஜயமுடன் வெகுவேதனையாய் தானிருந்து
யின்னம் ஒருசேதி என்கணவா சொல்கிறேன்கேள்
நான்பெண்ணரசு வெளியானால் காகம் குலுக்குதுகாண்
நான் போனவிடமெல்லாம் பூனை குருக்காகுதுகாண்
சந்நதியிலே வந்தாலொரு சன்யாசி வாரான்காண்
யிதுயென்ன விதியோ எமனிட்ட கட்டளையோ
என்றுசொல்லி ரதிதேவி யினிசொல்லும் வேளையிலே

மதன்சொல்

அப்பொழுது மன்மதரும் அடைவாக ஏதுசொல்வார்
சாலக வாசலுக்கு தயவாக தானடந்தார்
மெல்லி யனுப்பதுபோல் நெருங்கிமயிர் கோதிட்டு
சீவி மயிராத்தி, கெந்தபுஷ்பம் தானனிந்தார்
ஒவ்வொரு மயிருக்கும் ஒவ்வொரு முத்துகளும்
மோகினிபோல் மன்மதரும் மோகமாய் கொண்டையிட்டார்
அன்னமும் தாராபோல் அழகுபிரை தானானிந்தார்
சந்திரபிரை சூரியபிரை தானணிந்தார் மன்மதரும்
நெத்திக்கு சுட்டிகட்டி நீலவர்ண பொட்டுமிட்டு
மூன்றாம் பிரைபோலே முகத்திலே நாமமிட்டார்

கருங்குருவி வாலதுபோல் கடைகண்ணுக்கு மைதீட்டி
கோவை பழம்போல கூரிய மூக்குகளும்
மூக்குத்தி சித்தாக்கு முகத்திலே போட்டார்கள்
காதிலே கொப்புகளும் கனமாக தொங்கவிட்டார்
கழுத்துக் கிசைந்ததொரு கட்டுவர்கம் தானணிந்தார்
மார்புக் கிசைந்ததொரு வயிரப் பதக்கமிட்டார்
பத்தினியைப் போலே பாவாடை கட்டிக்கொண்டார்
பாவாடைக் கேற்றதொரு பசும்பொன்னால் ஒட்டியானம்
பாவாடை யுள்ளிடித்து பட்டாடை மேல்சாத்தி
பாங்குடனே மன்மதரும் பாவற்காய் வளையலிட்டார்
முழங்கால் திருவடிக்கும் முத்து புதைத்ததுபோல்
பத்து விரலுக்கும் பசும்பொன்னால் மோதிரங்கள்
எட்டு விரலுக்கும் யிணைபிரியா மோதிரங்கள்
கால்நிரைய யிட்டார்கள்
ஆண்ரூபம் விட்டு பெண்ரூபம் தானெடுத்தார்
மோகினியைப் போல யிருந்தார்காண் அப்பொழுது
அம்புரா தூணியவர் அணிந்தார் இருபுரமும்
கண்ட கோடாரிகளும் கக்கத்தில் பங்குகளும்
எதிர்ந்து வெட்டும்வில்லுகளும் யிருகையில் பட்டாவும்
வானா தடியும் வலத்தடி சக்கரமும்
கனமுடன் தானெடுத்து கச்சை யிருக்கிகட்டி
கவனமாகவேதான் கன்னிரதி முன்னே வந்தார்

ரதிசொல்

அப்பொழுது ரதிதேவி ஆரணங்கு ஏதுசொல்வார்
அல்லவே என்கணவா ஆணழகா சொல்கிறேன்கேள்
யிந்திரனால் ஆகாமலாவும்மை யிதக்கமாய் தானழைத்தார்
தேவர்களி னாலாகாமல் வகையாக தானழைத்தார்
அவர்களா லாகாமலாவும்மை அழைத்தாரோ யிப்பொழுது
என்தகப்பன் தபசழிக்க ஆகுமோ வுந்தனுக்கு
கரும்பை சிலைவளைத்தால் கரும்பொடிந்து போய்விடுமே

அரும்பினால் பாணமிட்டால் அரும்பொடிந்து போய்விடுமே.
புஷ்பபாணம் போட்டால் புகைஎழும்பி போய்விடுமே
என்தகப்பன் தபசழிக்க அழைத்தாரோ தேவர்களும்
நீர் போரேனென்று சொல்லி புகழுவது ஞாயமல்ல
ஆக்கரித்து பல்கடித்து அதிகமுள்ள சேதிசொன்னால்
உன்னைமடி பிடித்திழுத்து உட்கார வைப்பேனென்றால்

மதன்சொல்

அப்பொழுது மன்மதரும் ஆங்கார கோபமுடன்
என்னநீர் சொன்னாலும்இனி நீர்போனா பெண்ணரசே - அடி
பெண்புத்தியை கேட்டு பிழைப்பாரோ பூஉலகில்
மடக்காதே யிப்பொழுது வகைமோசம் வந்துவிடும்
கிட்டநீ வாராதே கிளிமொழியே வார்த்தைசொல்லும்
தூரத்தில்நின்று துலங்க வார்த்தை சொல்லும்
அன்பாக போவென்று அகிலநின்று வார்த்தைசொல்லும்
ஆக்ரமித்து பல்கடித்து அதிகமுள்ள சேதிசொன்னார்
பெண்ணே உனக்குபுத்தி நான்போதிக்க வேணுமடி
போக விடைகொடடி புத்தியுள்ள பெண்ணரசே

ரதிசொல்

மாரனே பரமனிட நேரொருவர் பேசினவர்
அப்பவே முப்பராதிகளை தப்பாமல் தானெரித்தார்
அரனென்று தெரியாமல் ஆதிபரா பரன்மேல்
அக்கணையை நீர்தொடுத்தால் அங்கமெல்லாம் பதறி
அப்போது ரதிதேவி ஆரணங்கு ஏதுசொல்வாள்
பயந்து நடுநடுங்கி பயணம்போய் வாருமென்றாள்
சரீரம் நடுநடுங்கி சுவாமியரே போமென்றாள்

பிரயாணம் போதல்

போவென்று சொல்லி புறப்பட்டாள் ரதிதேவி
தாதி மாரோட தயவாக தானடந்தாள்

தலையிலே கைவைத்து தானழுது வாராள்காண்
மன்மதனார் மேலே மனக்கவலை யானாள்காண்
துக்கங் கலாலே சோர்ந்துமங்கே விழுந்து
சுவாமியை தான்நினைந்து சாய்ந்துவிட்டாள் பஞ்சணையில்
கர்த்தாவே தான்நினைந்து கண்ணுரக்க மானாள்காண்
யிந்தபடி ரதிதேவி யிருக்குமந்த வேளையிலே

மதன்சொல்

மாயனார் தன்மகனும் அண்டர சபைக்காக
ஆபரண மெல்லாம்தரித்து ஆயுதங்களை எடுத்து
ஆரடா தேவதாச என்அழகுகிளி வாகனத்தை
அதிசயமாய் ஜோடித்து அரநொடியில் வாவெனவே
அப்போது தேவதாசன் அதிசீக் கிரமாக
அக்ஷணமே தானெழுந்து அழகுள்ள சாரதியை
அப்போது சாரதியும் அடித்தட்டு பொன்னாலே
அஷ்டதிக்கு வேளைகளில் அமுதகலசம் வைத்து
அடுமகரக் கொடியை அதன்மே லிருக்கிக்கட்டி
அனேகவித மாய்ரதத்தை அலங்கார மாய்செய்து
அருமையுள்ள நற்கிளியை அசையாமலே பூட்டி
அங்குஜவேல் தனக்குமுன்னே அறிக்கையிட தேவதாசன்
அப்பொழுது மன்மதரும் அழகுரதம் தான்பார்த்து
ஆனிப்பொன் தேர்மீதில் அமரக்கை யாகஏரி
அரிவையர்கள் புடைசூழ அண்டம் கிடுகிடுடென்ன
அலைகடலும் தான்குலுங்க அவசரமாய் போகலுற்றார்
அரி திருமால்தன் மகனும்

மதன்சொல்

அப்பொழுது மன்மதரும் அன்புடனே ஏதுசெய்தார்
பத்தினியால் வாக்கியத்தால் பயணமிட்டார் மன்மதரும்
கிளிவாகனம் மீதில் கிருஷ்ணன்மகன் தானேரி
ஆசார வாசல்விட்டு அணிமுகப்பில் வந்தார்காண்

காம படைகளெல்லாம் கலந்து நிறைந்துவர
மன்மத படைகளெல்லாம் மருவிவிளை யாடிவர
ஜனங்கள் ஊதிவர சிறுதாசி ஆடிவர
மத்தளங்கள் முழங்கிவர மாதர்க ளாடிவர
பெண்மதன் போல் புறப்பட்டார் மன்மதரும்
தென்னந் தெருகிடந்தார் தேரோடும் வீதிவிட்டார்
செட்டித் தெருகிடந்தார் சேனியர்கள் வீதிவிட்டார்
சிங்கார தோப்புகளும் திருக்குளமும் தான்கடந்தார்
தெய்வசபை நோக்கி திடமாகப் போகையிலே
வழியில் சகுனங்கள் வகைவகையாய் கானப்பெற்றார்
ஆகாத சகுனங்கள் ஆகுதே மன்மதற்கு
ஓரி யழுதிடுமாம் ஒற்றைவளம் வந்திடுமாம்
கொள்ளிவாய் பேய்களெல்லாம் கூத்தாடி நின்றிடுமாம்
அக்கினி முன்பாக அழுகிறாள் எதிராக
காகங்கள் கற்றி கதரி யழுதிடுமாம்
ஆண்பூனை குருக்காச்சி ஆக்ருடன் கற்றிடுமாம்
ஆகாத சகுனங்கள் ஆகுதே மன்மதற்கு
அஞ்சி பயந்துமதன் ஆயாசம் தானாகி - என்
அருமை தெரிந்தஅந்த அழகுள்ள ரதிக்கிளியும்
ஆகாது என்றுசொன்னாள் அவள்வார்த்தை கேளாமல்
வந்ததினால் யிப்பொழுது வகைவகையாய் கண்டேரி
பத்தினியாள் சொன்னது பலித்தது யிப்பொழுது
உத்தமியாள் சொன்னது பலித்தது யிப்பொழுது
கைசோர்ந்து மெய்சோர்ந்து கனக விரல்சோர்ந்து
தவிக்க லுற்றார் யிப்பொழுது

இதுமுதல் சகுனம்

கன்னிரதி யாளைவிட்டுமதன் உன்னிதமாய் தேரேரி
காரியமாய் அங்குஜனும் வீரியமாய் போகையிலே
காகம் கர்றென்றிடவும் நாகங்கள் சீரிடவும்

கரும்பூனை குறுக்கிடவும் பெரும்பன்றி ஓடிடவும்
காட்டானை கத்திடவும் கோட்டா னடித்திடவும்
சும்மாவண்ணா னழவும் கழுதைநரி நாய்களெல்லாம்
அழுது புலம்பிடவும்....
கண்டமுண்டைகள் கூடியங்கு சண்டைகள் செய்திடவும்
கட்டுவிரியன் யிடமாய்ஒரு மொட்டைபார்ப்பான் வலமாய்
கருங்குருவியும் பிரள பெரும்பானையும் முருள
கரடிபுலி வேங்கையடி ஒருகுருடி தடுமாறிவிழ
கட்டுவிரலை எடுத்து மொட்டைதலை மேல்வைத்து
கண்ணை கலங்கிவர எண்ணைக் குடமுடைய
கழுகுகள் தான்முறைக்க புழுவுகள் தான்சிரிக்க
கட்டுக் கிழத்தியவள் இட்டதொரு வளையல்களை
கங்கைகரை யில்உடைக்க மங்கயர்கள் கூடியழ
கருவாடு கட்டுரஊர் முரைப்பாடு பட்டுவிழ
கட்டில் நாற்காலிகலை ஒருமொட்டை பார்ப்பான் எடுத்து
கதரி பதரிவர எதிரில் ஆந்தைகுமர
கருத்த புடவைகட்டி வருத்தமுடனே ஒருத்தி
கையறைந்து பூமியின்மேல் மெய்மறந்து ஓலமிட
காணும் சகுனமெல்லாம் தோணவே பார்த்துமதன்
கண்ணை கலங்கியப்போ எண்ணாத எண்ணமெல்லாம்
கருத்திலே தான்நினைந்து வருத்தமுடன் மன்மதரும்
ஏங்கி மனங்கலங்கி எண்ணமிட்டுத் தான்நடந்தார்
ஏற்பட்ட சகுணம்கண்டு நின்றுவிட்டோ மாகில்
தேவர் மனதில் தீங்குவந்து நேருமென்று
சப்த சாகரமெல்லாம் சபிப்பார் எந்தனையும்
விதியின் பயனையல்லோ வெல்லமுடி போகாது
என்றுசொல்லி தானடந்தார் யிதமாக மன்மதரும்
இந்திர சபைநோக்க இனிபோனார் மன்மதரும்
கிளிவாகனம் விட்டிறங்கி தான்போனார் மன்மதரும்
அப்பொழுது மன்மதரை அல்லவரும் தான்பார்த்தார்

சந்திரரும் சூரியரும் தானவரும் வானவரும்
யிந்திரரும் இமயவரும் யிதமுள்ள தேவர்களும்
வானவரும் வசிஷ்டரும் மற்றுமுள்ள ரிஷிமாரும்
அஷ்டதிக்குப் பாலகரும் அனைவரும் தானெழுந்து
மன்மதற்கு உபசாரம்செய்து உட்காரு மென்றுரைத்தார்
ஆசனத்தின் மேலே அமர்ந்தார்காண் மன்மதரும் - அப்போ
தேவர்களை பார்த்து தீரமாக ஏதுசொல்வார்
எனையழைத்த காரியமென்ன இன்பமுடன் சொல்லுமென்றார்
ஏது காரியாமாக எனையழைத்தீர் தேவர்களே
என்றுசொல்லி மன்மதரும் தேவர்களைக் கேழ்க்கையிலே
அப்போது தேவர்களும் அன்பாக ஏதுசொல்வார்
மாரனே கோரரூப காரனே கேளுமுந்தன்
சூரர்உபத்திரம் மன்னா சொல்லமுடி போகாது
உன் மாமனார் நந்திவண்ணன் நேமமுடனே யிருந்து
மகாதவம் செய்ததினால் வேதனையாய் அண்டர்களும்
மனமுருகி வாடுவதால் கனமுடனே தானழைத்தோம்
உன்மாமனார் யிடத்தில் கணமுடனே நீரேகி
மலர்கணையை எய்துவிட்டால் கலங்கிசிவன் யோகங்கெட்டால்
மாயா சக்தியையுணர்ந்து நேயபுத்தியால் மணர்ந்து
மகிட்சிதரு வாய்யெனவே புகட்சியுடன் தானழைத்தோம்
அபயமென்று வந்தவற்கு ஆபத்தைக் காருமையா
அபயமென்று சொன்னவற்கு மனதுயரம் தீருமையா
பயந்தோடி வந்தவர்க்கு பரிதாபம் காருமைய்யா
என்றுசொல்லி தேவர்களும் யிதமாக தானுரைத்தார்
அந்த மொழிகேட்டு ஆணழகன் மன்மதரும்
பத்தினியாள் சொன்னது பலித்தது என்றெண்ணி
உத்தமியாள் சொன்னது உடனே பலித்ததென்று
பொண்சாதி சொல்லை பிரியமுடனே மனதில்வைத்து
கரும்பை சிலைவளைத்தால் கரும்பொடிந்து போய்விடும்
அரும்பினால் பாணமிட்டால் அரும்பொடிந்து போய்விடும்

புஷ்பபாணம் போட்டால் புகையெழும்பி போய்விடும்
காம விகாரமுண்டோ அந்தகடவுளான யீஸ்பரர்க்கு
சோக விகாரமுண்டோ அந்தசோணாசல யீஸ்பரர்க்கு
மன்மத விகாரமுண்டோ மகாதேவ யீஸ்பரர்க்கு
என்னமாய் எய்வதென்று ஏங்கிமனங் கலங்கி
யின்பமுடன் உரைத்தார் இயைவான மன்மதரும்
அப்போது தேவர்களும் அக்ஷணமே ஏதுசொல்வார்
உன்மகிமை தெரியாமல் உத்தமரே கேளுமென்றார்
கங்கையை யீஸ்பரர்தலையில் வைத்ததுதன் பெருமை
அகலிகை யென்னும் பெண்ணை புகல்வார் சபித்ததுவும் உன்பெருமை
இத்தனை பெருமையாய் இருக்கிற மன்மதரே
என்றுசொல்லி தேவர்களும் இதக்கமுடன் தானுரைத்தார்
அப்போது மன்மதரும் அன்புடனே ஏதுசொல்வார்
சீரி எழுந்திருந்து....
ஆக்கரித்து பல்கடித்து அதட்டியே தானெழுந்தார்
கரும்பாலே பாணம் கடுகெனவே தானெடுத்து
காம படைகலெல்லாம் மகிழ்ந்து விளையாடிவர
தேவர் களெல்லாம் தரமாக கூடிவர
பச்சைகிளிமேல் மன்மதர் பாங்காக தானேரி
தெய்வ சபைநோக்கி அதிதீரமாக தானடைந்தார்
ஆதிசிவன் தபசருகே அழகாக வந்தார்காண்
சுத்தி வளைத்தார்காண் அசுரர் படைமேலே
தேவர்க ளெல்லாம் திரமாக ஏதுசெய்தார்
அவரவற்கு உள்ளவிதமாய் அனேகம் காட்டலுற்றார்
அப்போது மன்மதரும் அன்பாக ஏதுசெய்தார்
தபசுநிலை யருகில் தான்வந்தார் மன்மதரும்
யீஸ்பரர் தன்னருகில் பன்மமாய் வந்தார்காண்
கரும்பாலே பாணம் கடுகெனவே தானெடுத்தார்
அவர் எதிராக வந்துநின்று ஏதுசெய்தார் மன்மதரும்
அப்போது மன்மதரும் அன்பாக எண்ணமிட்டார்

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யிருக்கலுற்றார்
மண்டியிட்டு பாணம் மகாதேவர்மேல் விடலாமா என்று
பாணமிட போகையிலே பார்தார்காண் யீஸ்பரரை
ஏகாந்த மாகயீஸ்பரர் யிருந்தார்காண் அப்போது - அவர்
கண்ணை திரவாமல் கடவுள் தபசிருந்தார்
தக்ஷணா மூர்த்தியாய் சிவனார் தபசிருந்தார்
அவர்தபசை தானழிக்க ஆனதொரு மன்மதரும்
மண்டியிட்டு பாணம் வருந்தியே தானெடுத்து
ஏங்கியே மனங்கலங்கி இனியென்ன செய்வதென்று - நான் தெய்வ
சபையில் திடமாக சபதமிட்டேன்
பாணமிட்டால் நம்மை பஸ்பமாய் எரிப்பாரே
கண்திறந்து பார்த்துநம்மை கருந்தணலாய் எரிப்பாரோ
என்றுசொல்லி மன்மதரும் ஏங்கினா ரப்போது
கைவில்லை தான்போட்டு கலைந்தார்காண் மன்மதரும்
மூர்ச்சியாக மன்மதரும் விழுந்தார்காண் அப்போது
பரமசிவனருகே பார்வதியை கண்டார்காண்
அம்மன் இருக்கையிலே (நம்மை) அக்கினியாய் எரிப்பாரோ
எரிப்பாரோ என்றெண்ணி ஏதுசெய்தார் மன்மதரும்
அம்மனை கண்டுமதன் ஆதரவு கொண்டுமிக
கையிலே பாணம் கட்டழகன் தானெடுத்து
மார்பிரள வாங்கி தோள்பிரள விட்டார்காண்
தொடுத்தார் சிவன்மீதில்
ஐந்து மலர்பாணம் அலைகுலைய விட்டார்காண்
பஞ்சபுஷ்ப பாணம் வந்து எதிர்த்ததுகாண்
திக்கென்று கண்ணை திறந்தார்காண் யீஸ்பரமும்
கண்டார்காண் பாணத்தை காலகண்ட யீஸ்பரரும்
கண்டவுடன் யீஸ்பரரும் காந்தாளம் தானாகி
முன்னால் முப்புராதிகளை முகுர்த்ததில் தானெரித்தார்
திரிபு ராதிகளை சிரித்தெரித்தார் யீஸ்பரரும்
அப்போதந்த யீஸ்பரற்கு அதிககோபம் வந்ததினால்

அருங்கண்ணை திறந்துவிட்டார் அன்று
பூமிஒரு அச்சாகி பூலோகம் தேராகி
நக்ஷத்திரங்கள் நவசிலங்கு தானாகி
சந்திரரும் சூரியரும் வண்டிக்கால் தானாகி
கபடமுள்ள விஷ்ணுவரும் பாம்பாய் சபித்தார்காண்
அப்போது யீஸ்பரர்க்கே அதிககோபம் தானாகி
பாணமிட்ட மன்மதரை பஸ்பமாய் தானெரித்தார்
கணைதொடுத்த மன்மதரை செந்தணலாய் தானெரித்தார்
பச்சநிற மேனியெல்லாம் பஸ்பமாய் தானெரித்தார்
யிந்தபடியாக அவரும் யினிஇருக்கும் வேளையிலே
அன்பால் சரித்திரத்தை அன்புடனே ஏதுசொல்வார்.